# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

AUGUST—1955







30 AUG 1956
MADRAS


அறிஞர் வேதநாயகம் பிள்ளை


ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94–95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

## ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

**94-95, New Street, Mannady P. O. Madras-1.**

POST BOX NO. 1818

# "ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "**புதுமுறை சங்க வாசகங்களை**" அல்லது "**வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை**" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50–க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "**ஆரம்பக்கல்வி**" மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M .O. மூலம் அனுப்பவும்.

## புதுமுறை சங்க வாசகங்கள்.

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 8 | 4–5–'55 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 22 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 7 | 0 | 23 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 8 | 0 | 23 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 23 | 19–5–'54 |

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1–0–0 அனுப்பவும்.




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர்: பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 16 | ஆகஸ்டு 1955 | இதழ் 8

# உள்ளத்தைக் கவர்ந்த உரிமை முழக்கம்!

ஆகஸ்டு 18 வியாழக்கிழமை—ஆம்—அன்றையதினம் சென்னை நகரமே ஒரு புதிய வடிவம் பெற்றிருந்தது.

அதன் ஆயிரக்கணக்கான கடைகள் அத்தனையும் மூடப்பட்டுக் கிடந்தன.

அலுவலகங்கள் யாவும் பணியாற்றவில்லை.

அச்சுக்கூடங்கள் ஒவ்வொன்றும் வேலை செய்யவில்லை.

கல்லூரிகள் யாவும் திறக்கப்படவில்லை.

உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், தொழிற் பள்ளிகள் —எதுவுமே பணி புரியவில்லை.

டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள், தனிப்பட்டவர்களின் கார்கள்—எவையுமே வீதிகளில் தங்களுடைய வழக்கமான பவனியை நடத்திடக் காணோம்.

ஆம். நகரம் முழுவதுமே அன்றைய தினம் வேலை நிறுத்தம் செய்திருந்தது.

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் நிறுவனம், சோஷலிஸ்ட் அமைப்பு—எல்லாக் கட்சிகளுமே அன்றைய வேலை நிறுத்தத்தில் மனப்பூர்வமாக ஈடுபட்டன.

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள், வழக்கறிஞர்கள், அத்தனைப் பேருமே வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர்.

உயர்நிலை நீதி மன்றம் கூட அன்றைய தினம் மூடப்பட்டுவிட்டது.

அரசாங்க பஸ்கள்கூட அன்று ஓடவில்லை.

சென்னை நகரத்தின் வரலாற்றிலேயே இவ்வளவு பரிபூரணமான ஹார்த்தால் இதற்கு முன்னர் எப்போதும் நடைபெற்றதில்லை.

சென்னை நகரில் மட்டும்தானா—பம்பாய், கல்கத்தா, டெல்லி, ஆமதாபாத், பூனா, பாட்னா, ஐதராபாத், எங்கும், எங்கெங்கும் இதே வகையான ஹார்த்தால், கடையடைப்பு, வேலை நிறுத்தம், கண்டன முழக்கம்.

கட்சி வேற்றுமை இல்லை. மதவேறுபாடு கிடையாது. இன வேற்றுமை பார்க்கப்படவில்லை. மொழி வேற்றுமை கருதப்படவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மக்கள் அத்தனைப் பேரும் ஒருங்கே திரண்டெழுந்து ஒரே குரலில் முழக்கமிட்டனர் அன்றையதினம்.

பண்டித நேருவும் பெரியார் இராமசாமியும், ஏ. கே. கோபாலனும் அறிஞர் அண்ணாவும், டாக்டர் வரதராசலு நாயுடுவும் பி. ராமமூர்த்தியும், கவர்னர் பிரகாசாவும் ஏழைத் தொழிலாளியும்—எல்லோரும் தத்தம் கண்டனக் குரலை எழுப்பத் தவறவில்லை.

கோவா—அது, பம்பாய் மாகாணத்தை ஒட்டியுள்ள ஒரு சிறு பகுதி. அந்தப் பகுதியை ஆண்டு வருபவர்கள் போர்த்துகல் என்

னும் ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இன்னமும் அந்தப் பகுதியை விட்டு வெளியேற மறுக்கிறார்கள்.

இந்திய மண்ணிலே இன்னமும் அந்நியர் ஆதிக்கமா—விட்டு வைக்கமாட்டோம் இந்த வீணர்கள் ஆட்சியை என்று குமுறி யெழுந்தனர் ஆயிரமாயிரம் காளைகள், ஆகஸ்டு 15 அன்று.

கோவாப் பகுதிக்குள் நுழைவோம், கொடியர்கள் ஆட்சியை விரட்டுவோம் என்று வீரமுழக்கமிட்டபடி ஊர்வலமாகச் சென்றனர்.

கோவாவின் எல்லையோரத்தில், பற்பல முனைகளில், 100 பேர், 200 பேர், 300 பேர் என்கிற முறையில், ஆங்காங்கே அறப்போர் வீரர்களின் அணி வகுப்புகள் உள்ளே நுழைய முயன்றன.

கைகளிலே ஆயுதம் ஏந்திச் செல்லவில்லை அந்த அஞ்சா நெஞ்சர்கள். வெறுங் கையோடுதான் சென்றனர்.

பலாத்கார எண்ணம் துளியும் அவர்கள் உள்ளத்தில் இல்லை. அமைதியும் அன்பும் தாய்நாட்டுப் பற்றும்தான் அவர்கள் உள்ளத்தில் குடி புகுந்திருந்தன.

தங்களுடைய பொன்னாடு மாற்றானின் ஆட்சியில் இருத்தலாகாது என்னும் ஓர் உயர்ந்த நோக்கத்தைத் தவிர வேறு தவறான எண்ணம் ஏதும் அந்த உத்தமர்களிடம் இல்லை.

இவ்வளவு தூய உள்ளமும், சிறந்த நோக்கமும், படைத்த அந்த அறப்போர் வீரர்களை, இளங்காளைகளை, விடுதலை கோரிய வியத்தகு நெஞ்சங்களை, போற்றிப் பாராட்டவேண்டிய புனிதமான தோழர்களை, போர்த்துகல் ஏகாதிபத்யம் எப்படி வரவேற்றது தெரியுமோ? குண்டு மழை பொழிந்து!

புனிதமான நோக்கத்தை நிறைவேற்ற அமைதியான முறையில் சென்ற அஞ்சாத நெஞ்சர்கள்மீது துப்பாக்கிக் குண்டுகளைச் சரமாரியாக ஏவியிருக்கின்றனர் ஈவு இரக்கமற்ற ஆதிக்க வெறியர்கள்.

ஏறத்தாழ முப்பது பேர் இறந்துபோயிருக்கின்றனர். ஐந்நூறு பேருக்குமேல் படுகாயம்.

பல்மான் அடிபட்டு மரணப் படுக்கையில் கிடந்து தத்தளித்தவர்களில் மதுரை நகரத்தைச் சேர்ந்த சுபத்ராபாய் என்கிற தமிழ் நாட்டுப் பெண்மணியும் ஒருவர். இந்த அம்மையாரின் வீரச் செயலைச் செவிமடுக்கும் எவர் தம் உள்ளத்திலும் நாட்டுப்பற்று குதித்தெழாமல் இருக்காது. வி. டி. சித்தலே என்பவர் தலைமையில்

நுழைந்த வீரர்கள் அணியில் அந்தப் பெண்மணி இருந்தார். எல்லைக்குள் நுழைந்ததும், துப்பாக்கியைக் காட்டி, போர்த்துகீசிய போலீசார் சுட்டு வீழ்த்தப் போவதாக மிரட்டியிருக்கின்றனர். அஞ்சவில்லை அணியில் திரண்டிருந்த அஞ்சாத நெஞ்சங்கள். மிரட்டலுக்கும் அஞ்சாமல் வீரர்கள் முன்னேறினர். உடனே குண்டுகள் சடசடவெனப் பாய்ந்தன போர்த்துகீசியப் போலீசிடமிருந்து. வீரர்கள் பலர் குண்டுகளால் தாக்கப்பட்டு கீழே சாய்ந்தனர். அவர்கள் கையிலிருந்த இந்தியக் கொடியும் சாய்ந்தது.

இதனைக் கண்ணுற்றார் சுபத்ராபாய். பாய்ந்தோடிச் சென்றார். மரணத்துக்கும் அஞ்சாமல் கொடியைத் தாங்கிப் பிடித்தார். துப்பாக்கி வேட்டுகள் ஓயாமல் பிறக்கும் நேரம். மரணம் தன் கோரப் பிடிக்குள் பற்பலரையும் சிக்கவைக்கும் சிக்கலான இடம். போர்த்துகீசியரின் ஏகாதிபத்ய வெறி உணர்ச்சி எல்லைமீறிச் சென்றுவிட்ட சமயம். தெரியும் அத்தனையும் அந்த வீரத்தமிழ் அன்னைக்கு என்றாலும் அஞ்சவில்லை அந்த வீராங்கனை. என் தாய்நாட்டுக் கொடிக்கு அவமானமா, பொறுக்கமாட்டேன் ஒரு கணமும் என்று சீறியெழுந்தார்—கொடியை உயர்த்திப் பிடித்தார்—கழுத்திலேயும் தோள் பட்டையிலேயும் குண்டுகள் பாய்ந்தன—நிலை தவறிக் கீழே விழுந்தார்—இன்றோ, ஆஸ்பத்திரியில், மரணப் படுக்கையில் தத்தளிக்கிறார்.

போர்த்துகீசியர், அன்றைய தினம், மனித அபிமானம் துளியுமின்றி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

50 பேருக்குமேல் இருக்கமுடியாத ஓர் அறையில் 500 பேருக்குமேல் அறப்போர் வீரர்களை ஓர் இரவு முழுவதும் அடைத்து வைத்திருக்கிறார்கள்.

அவர்களிலே பலர் இந்தக் கொடுமை தாளமுடியாமல் மயக்கமடைந்து கீழே சாய்ந்தபோதும் அவர்களை இழுத்துப் போட்டு வன்மையாக அடித்திருக்கிறார்கள்.

தாகத்திற்குத் தண்ணீர்—மாரடைக்கும் நிலை என்று கேட்டபோதும் கூட ஒரு சொட்டுத் தண்ணீரும் தர மறுத்திருக்கிறார்கள்.

முன் எச்சரிக்கை எதுவுமின்றி, அறப்போர்த் தோழர்களை, காக்கை குருவிகளைச் சுடுவதுபோல சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள்.

அவர்கள் தம் வெறிச் செயல் கேட்டுதான் அகில இந்தியர்வும் குமுறியெழுந்தது ஆகஸ்டு 16, 17, 18 ஆகிய தேதிகளில்.

நாடெங்கும் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது.

போர்த்துகீசியரின் வெறிச் செயலுக்குக் கண்டனம் எல்லாத் திசைகளிலிருந்தும் பிறந்திருக்கிறது.

பிறக்காமலா இருக்கும்? அமைதியான முறையில், பலாத்காரம் துளியுமின்றி, எங்கள் தாயகத்தை விட்டு விலகுங்கள் என்கிற வேண்டுகோளை விடுத்த உத்தமர்களை மனித உணர்ச்சியின்றி ஒரு சிலர் சுட்டுத் தள்ளுவது என்றால் அதனை எவர் தானாகட்டும், எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கமுடியும்?

அதிலும், போர்த்துகீசிய ஏகாதிபத்யம் இன்னமும் இந்த நாட்டிலே இருந்துதான் ஆகவேண்டும் என்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது.

போர்த்துகீசியரைவிட ஆயிரம் மடங்கு பலம் பொருந்திய வல்லரசு பிரிட்டன் — அது வெளியேறிவிட்டது 1947–ல்.

என்ன ஆனாலும் சரி, பாண்டிச்சேரியை விட்டு வெளியேற மாட்டோம் என்று வீம்பு பேசிக்கொண்டிருந்தது பிரான்ஸ். அதுவும் வெளியே சென்றுவிட்டது 1954–ல்.

மாபெரும் வல்லரசாகிய பிரிட்டனும் பெரியதோர் அரசு ஆகிய பிரான்சுமே இந்தியாவில் இனி தங்கள் ஆதிக்கம் இருக்கமுடியாது என்பதை அறிந்து வெளியே சென்றுவிட்ட பிறகு சுண்டைக்காய் அளவுள்ள இந்தப் போர்ச்சுகல் மட்டும் இன்னமும் எத்தனை நாளைக்கு இங்கே ஆதிக்கம் புரிந்து கொண்டிருக்கமுடியும்?

அம்மியும் குழவியுமே ஆகாயத்தில் பறக்கும்போது தும்பும் தூசும் மட்டும் எப்படிப் பறக்காமல் இருந்துவிட இயலும்?

ஒரு நாடு, மற்றொரு நாட்டை அடக்கி ஆள்வதென்பது, இனி ஒரு நாளும் நடக்காத காரியம்.

இதனை நன்றாக அறிந்துகொண்டன பிரிட்டனும் பிரான்சும். எனவேதான் வெளியேறிவிட்டன இந்தியாவைவிட்டு.

இந்த நல்லறிவு ஏன் இன்னமும் பிறக்கவில்லை போர்த்துகீசிய ஏகாதிபத்யத்திற்கு?

கேட்கிறது உலகம். கேட்கின்றனர் இந்தியர். கேட்கத்தான் செய்வர் மனித உணர்ச்சி படைத்த எவரும்.

ஆகஸ்டு 15 அன்று கோவா எல்லையில் சிந்தப்பட்ட வீரர்களின் இரத்தம், போர்த்துகீசிய ஆட்சிக்கு எழுப்பப்பட்ட கல்லறை என்பதைப் போர்த்துகீசியர்கள் மறந்துவிடவேண்டாம்.

உணர்ச்சி கொண்டெழுந்து உரிமை முழக்கம் புரியும் மக்களை அடக்குமுறை வெறியாட்டத்தின் மூலம் சில நாட்களுக்கு அடக்கி வைக்கலாம். பல நாட்களுக்கு அடக்கிவைக்கலாம். ஆனால் என்றென்றைக்கும் அடக்கிவைக்க இயலாது என்பதை உலக வரலாறு அதன் ஒவ்வோர் அத்தியாயத்திலும் விளக்கிச் சொல்லுகிறது. அதனைப் படித்துப் பார்க்க நேரமில்லாவிட்டாலும் படித்து அறிந்தவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும் போர்த்துகீசியர்.

ஒன்றுமட்டும் நிச்சயம். இன்றைக்கில்லாவிட்டாலும் நாளை, நாளை இல்லாவிட்டாலும் மிக விரைவில், கோவா, விடுதலை பெறத்தான் போகிறது.

எத்தனை ஆயிரம் துப்பாக்கிகளை அடுக்கிக் காட்டினாலும் போர்த்துகல், அந்த விடுதலை விழாவைத் தடுத்துவிட முடியாது.

இந்த உண்மையை உணர்ந்து, உடனடியாகக் கோவாவை விட்டு வெளியேறிவிடுவதே போர்த்துகீசிய ஏகாதிபத்யம் புரிய வேண்டிய பணி,

# நடுநிலை மன்றங்கள் நிறுவுதல் வேண்டும்

கோழிக்கோட்டுப் பகுதியில் உள்ள உதவிபெறும் ஆரம்பப் பள்ளி ஒன்றின் மானேஜருக்கு, அந்த மாவட்டத்து டி. இ. ஒ. அவர்களால், அவருடைய அதிகாரத்துக்கு மீறிய உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டது.

உத்தரவு, டி. இ. ஓ.வின் அதிகாரத்துக்குப் புறம்பானது என்றும், எனவேதான் அதற்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்துவிட்டார் மானேஜர்.

கல்வி இலாகாவின் ஓர் அதிகாரியாகிய தன்னுடைய உத்தரவைப் புறக்கணித்ததால், தான் குறிப்பிட்ட மானேஜரால் நடத்தப்படும் பள்ளிக்கூடத்திற்கான அரசாங்க அனுமதியை ரத்து செய்வதாக. டி. இ. ஓ. வேறோர் உத்தரவைப் பிறப்பித்தார்.

புதிய உத்தரவை எதிர்த்து, மானேஜர், சென்னை உயர்நீதி மன்றத்திற்கு மனுச்செய்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, குறிப்பிட்ட பிரச்சினையில், மானேஜர் நடந்துகொண்ட முறையில் தவறு எதுவுமில்லை என்றும், டி. இ. ஓ.வின் உத்தரவு செல்லாது என்றும், எனவே பள்ளிக்கூடத்தின் அனுமதி ரத்து செய்யப்பட்டது செல்லாது என்றும் தீர்ப்பு அளித்திருக்கின்றார். தீர்ப்பு இதே இதழில், வேறோர் இடத்தில் விளக்கமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

கோழிக்கோட்டு மானேஜருக்கு ஏற்பட்டதைப் போலவே வேறு பல மானேஜர்களுக்கும் சில பல சமயங்களில் கல்வி அதிகாரிகளுடன் தகராறு ஏற்படுகிறது.

மானேஜர்களுக்கு மட்டும்தான் என்று அல்ல. பல சமயங்களில் ஆசிரியர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்குமிடையே இப்படிப்பட்ட சிக்கல்கள் பிறக்கின்றன.

கோழிக்கோட்டு மானேஜருக்கு ஓரளவு பொருள் வசதி இருந்திருக்கக்கூடும். எனவே அவர் எளிதில் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க முடிந்துவிட்டது.

ஆனால் எல்லா மானேஜர்களாலும், எல்லா ஆசிரியர்களாலும், ஒவ்வொரு பிரச்சினை அல்லது சிக்கல் தோன்றுகிறபோதும், இப்படி உயர்நீதி மன்றம் சென்று கொண்டிருப்பது, முடியாத செயல்—அதற்குத் தேவையான அளவு காலத்தையும், முயற்சியையும், பணத்தையும் அவர்களால் பெற இயலாது.

எனவே அவர்கள், இப்போது, சரியோ தவறோ, கல்வி அதிகாரிகள் தருகிற உத்தரவுகளையே வேத வாக்குகளாக ஏற்றுத் தீர வேண்டியிருக்கிறது.

ஒரு கல்வி அதிகாரி பிறப்பிக்கிற உத்தரவு தவறானதாகக் காணப்படின், அவருக்கு மேற்பட்ட கல்வி அதிகாரியிடம் மனுச் செய்துகொள்ளலாம் என்கிற விதிமுறை ஒன்று இருப்பது உண்மைதான்.

ஆனால் பெரும்பாலும், உயர்தர கல்வி அதிகாரிகள், தங்களுக்குக் கீழ்ப்பட்ட கல்வி அதிகாரிகள் தவறு செய்திருப்பதாகத் தெரிந்தால்கூட, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க விரும்புவதில்லை.

ஒரு சில கல்வி அதிகாரிகள் நேர்மையான முறையிலும் அஞ்சாத நெஞ்சத்துடனும் கடமை உணர்ச்சி தவறாமல் நடந்து கொள்ளலாம். ஆனால் பெரும்பாலோரால் அப்படி நடக்கமுடியாத வகையில் இன்றைய சூழ்நிலை இருக்கிறது.

எனவே மானேஜர் — ஆசிரியர் — கல்வி அதிகாரிகள் இவர்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துவைக்க உயர்தர கல்வி அதிகாரிகளிடம் செல்வது என்கிற ஏற்பாட்டைவிட, இதற்கென்று, மாவட்டந்தோறும் நடுநிலை மன்றங்கள் (District Tribunals) ஏற்படுத்துவது சாலச்சிறந்தது. இந்த மன்றங்களில் மானேஜர்களின் பிரதிநிதிகள், ஆசிரியர்களின் பிரதிநிதிகள், அரசாங்கத்தின் பிரதிநிதிகள் முத் திறத்தாரும் இடம்பெறலாம்.

இப்படிப்பட்ட மன்றங்கள் ஏற்படுமானால், மானேஜர்கள் — ஆசிரியர்கள் — கல்வி அதிகாரிகள் இவர்களுக்கிடையே ஏற்படும் குழப்பங்கள் விரைவில் தீரும். அக் குழப்பங்களை நேர் செய்வதற்காக எவரும் உயர்நீதி மன்றம் செல்லவேண்டிய நெருக்கடியும் ஏற்படாது. பணச் செலவும் மிச்சமாகும்.

அரசாங்கத்தார், இத்தகு மன்றங்களைத் தவறாமல் ஏற்படுத்த வேண்டும் என்பது நம்முடைய ஆசை மட்டுமல்ல, இன்றைய அவசியமும் ஆகும். ★

---

# சம்பள நஷ்டஈடு

## டைரக்டருடன் பேட்டி (24–8–55)

அரசாங்க புதிய உத்தரவின்படி ரூ. 100-க்கு குறைவான வருமானமுள்ள, பெற்றோர்களின் குழந்தைகளுக்கு இலவசமாக எய்டட் ஆரம்பப் பள்ளிகளில் கல்வி போதிக்கப்பட்டு கடந்த 3 மாத காலமாக எத்தகைய நஷ்டஈடும் அரசாங்கம் கொடுக்க ஏற்பாடு செய்யவில்லை. இதன் விஷயமாக இன்று கல்வியிலாகா டிப்டி டைரக்டர் அவர்களை பேட்டிகண்டு கேட்டதில், சம்பள நஷ்டஈடு கூடிய சீக்கிரத்தில் எய்டட் பாடசாலைகளுக்கு கொடுக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறதென்றும், எப்படியும் செப்டம்பர் 30-ம் தேதிக்குள் பணம் கிடைத்துவிடுமென்றும் உறுதி கூறினர்.

பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய தொகை 1951–1952 முன்பு வசூல் செய்த (Rate) விகிதம் கொடுப்பதா? அல்லது புதிதாக ரேட் ஏற்படுத்தி, Rural, Urban, முனிசிபல் எல்லைக்குள் உள்ள பாடசாலைகளுக்கு ஒருவித உயர்ந்த விகித சாரமும், முனிசிபல் அல்லாத பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு சற்று குறைந்த விகிதசாரம் கொடுப்பதா என்பது போன்ற பல சிக்கல்கள் இருந்து வருவதாகவும், இவைகளை பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு சற்று காலம் தேவைப்படுகிறதென்றும், எப்படியும் 30–9–55-க்குள் பணம் எல்லா எய்டட் பாடசாலைகளுக்கும் கிடைத்துவிடும் என்றும் டிப்டி டைரக்டர் உறுதி கூறினர்.

P. வீரராகவன், தலைவர்.

சென்னை இராஜ்ஜிய எய்டட் பள்ளி மானேஜர்கள் சங்கம், சென்னை.

# தமிழ்ப் பணி புரிந்த தகைசால் அறிஞர்

[மா. இளஞ்செழியன், B. A. (Hons)]

என்னய்யா இருக்கிறது உங்கள் தமிழ்மொழியிலே?

நாவல் உண்டா?

நாடகங்கள் உண்டா?

விஞ்ஞான ஏடுகள் உண்டா?

அரசியல் புத்தகங்கள் உண்டா?

பழைய இலக்கியங்கள் உண்டு ஏராளமாக. அது தெரிகிறது நன்றாக. ஆனால் இந்தக் காலத்துக்குத் தேவையான புதிய புதிய உரைநடை நூல்கள் ஏது உங்கள் மொழியிலே?

ஆங்கில மொழியைப் பாருமய்யா! எத்தனை அருமையான நாவல்கள்! எத்தனை எத்தனை நாடகங்கள்! எத்தனை நூறு விஞ்ஞான விளக்கச் சுவடிகள்! எண்ணற்ற அரசியல் ஏடுகள்! அது அல்லவா தற்காலத்துக்குத் தேவையான மொழி!!

உங்கள் மொழியும்தான் இருக்கிறது—இருந்து? என்ன பலன்? எங்கே இன்றைக்குத் தேவையான ஏடுகள்? ஏது அவை உங்கள் மொழியிலே?

இப்படித்தான் கேட்டனர் பலர், 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்.

தமிழ் நாட்டில் இருந்துகொண்டுதான் இப்படிக் கேட்டார்கள்.

கேட்டவர்களும் தமிழர்கள்தான். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்தான்.

ஆனால் அவர்கள் ஆங்கிலம் படித்த தமிழர்கள்.

அதுமட்டுமல்ல. தமிழ் மொழியின் இலக்கியங்களைப் படித்தறியாத தமிழர்கள்.

தமிழ் மொழியைப் பயிலாமலே, செந்தமிழின் இலக்கிய வளங்களை ஆராய்ந்து அறியாமலே, அகநானூற்றின் அழகையும் புறநானூற்றின் பொலிவையும் படித்து உணராமலே, சிலப்பதிகாரத்தின் செழுஞ் சுவையையும் தெள்ளு தமிழ் வள்ளுவரின் தேனினும்

இனிய குறளையும் அறியாமலே அவர்கள் தமிழ் மொழியைப் பழித்து வந்தனர்.

செந்தமிழ் மொழி, மிகப் பழைய மொழி. வடமொழி, லத்தீன், கிரேக்கம், ஹீப்ரு ஆகிய மொழிகளும் பழைய மொழிகளே என்றாலும்; அவைகள் அத்தனையும் இன்றையதினம் வழக்கிழந்து விட்டன. அவற்றைத் தங்களுடைய வாழ்க்கை மொழியாகக் கொண்டு, அன்றன்றாடத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவார் யாரும் இல்லை. உலகத்தில் எந்தப் பகுதியிலும் அவற்றைப் பேசுவார் எவரும் இல்லை.

பழங்கால இலக்கிய மொழிகள் என்கிற முறையிலே அவை பேசப்படுகின்றனவே தவிர, பேச்சு வழக்கில் நிலவவில்லை.

ஆனால் தமிழ் ஒன்றுதான், உலகின் மிகப் பழைய மொழிகளில், இன்னமும் பேச்சு வழக்கில் தன் பொலிவு சிறிதும் குன்றாது ஒளி வீசித் திகழ்ந்து வரும் மொழி.

தமிழ், உலகின் எந்த மொழிக்கும் தாழ்ந்ததல்ல.

அதுமட்டுமல்ல. தமிழின் அளவுக்கு உயர்ந்துவந்துள்ள மொழிகள் உலகிலே மிகச் சிலவே உள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த—நாம் தொடக்கத்தில் குறிப்பிட்ட—ஆங்கிலம் படித்துத் தமிழை மறந்த தமிழர்கள், செந்தமிழ்மொழியின் இந்த உயர்தனிச் சிறப்பினை ஒரு சிறிதும் உணராமல் தமிழைப் பழித்தனர்.

அவர்களுடைய பழிப்புரையின் மிகப் பெரும் பகுதி முற்றிலும் அபத்தம் என்றாலும் அதிலே ஒரு சிறு உண்மையும் இருக்கத்தான் செய்தது.

தமிழிலே செய்யுள் நூல்கள் ஏராளமாக இருந்தனவே தவிர, உரைநடை நூல்கள் அப்போது இல்லை.

தமிழறிஞர் தாண்டவராய முதலியார் தீட்டிய "பஞ்சதந்திரக் கதை"களும், பெஸ்கி எனப்படும் வீரமாமுனிவர் இயற்றிய பரமார்த்த குருவின் கதைகளும் தவிர வேறு உரைநடை நூல் எதுவுமே தமிழில் தோன்றாத காலம் அது.

உங்கள் தமிழிலே நாவல் ஏது? என்று எவரேனும் கேட்டால் ஏடா மூடா இதோ உண்டு பாராய் என்று எடுத்துக் காட்ட முடியாத நிலை உண்மையாகவே அந்நாளில் நிலவி வந்தது.

தமிழுக்கு இருந்த இந்தக் குறைபாட்டை அகற்றத் துணிவுடனும் தெளிவுடனும் முன்னால் வந்தார் ஒரு பேரறிஞர்.

"தமிழிலா நாவல் இல்லை? இதோ பாரீர்!" என்று, தானே ஒரு நாவலை, அழகிய முறையில் இயற்றி, அன்பான முறையில் மக்கள் முன் வைத்தார்.

படிக்கப் படிக்கப் பேரின்பம் தருவதாக, நகைச்சுவை நிறைந்ததாக, இனிமையும் எழிலும் தவழ்ந்திடும் நிலையினதாக, எண்ணற்ற உயரிய கருத்துக்களை எளிய தமிழில் எடுத்தெடுத்து வழங்கும் அறிவுக் கருவூலமாக அமைந்திருந்தது அந்த ஏடு.

ஏட்டின் பெயர், "**பிரதாப முதலியார் சரித்திரம்**"

இயற்றியவர் பெயர், **மாயவரம் எஸ். வேதநாயகம் பிளளை.**

புத்தகம் வெளியிடப்பட்ட ஆண்டு, 1876.

பிரதாப முதலியார் சரித்திரம்—அந்த அழகிய நாவல்—அந்த அற்புதமான பொன்னேடு தன் இன்பப் பவனியைத் தொடங்கியவுடனே தமிழகத்தில் ஒரு குதூகலம் பிறந்தது. தமிழ் மக்களுடைய உள்ளத்தில் ஒரு புதிய களிப்பு கூத்தாடிற்று. அவர்களுடைய கண்களிலே ஒரு புதிய பொலிவு ஒளி வீசிற்று.

இதோ தமிழிலே நாவல்! இதோ ஒப்பற்ற ஓர் உரைநடை ஏடு! இதோ, படிக்கப் படிக்கத் தெவிட்டாத புத்தகம்! இதோ இருக்கிறது நம் குறையை அகற்றும் கட்டிக் கரும்பு, தெவிட்டாத தேன் என்றெல்லாம் தமிழ்ப்பற்று மிகுந்தவர்கள், இந்த ஏட்டைக் கண்டதும் துள்ளிக் குதித்தனர். ஆனந்தப் பள்ளும் பாடலாயினர். "**இக் காலத்தில் நாவல் என்று வழங்கும் நவீன கதையைத் தமிழில் யாவரும் இப்போது எழுதி வருவதற்கு வழி காட்டியவர்கள் வேதநாயகம் பிள்ளை அவர்களே**" என்று ஒரு முறை, டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் மனம் மகிழ்ந்து எழுதினார். அது முற்றிலும் உண்மை. தமிழ் நாட்டின் முதல் தமிழ் நாவலாசிரியர் வேதநாயகம் அவர்கள்தான். இதனை எவரும் மறுத்தல் இயலாது.

இன்றைய தினம் தமிழகத்திலே ஏராளமான தமிழ் நாவல்கள் உலவுகின்றன. அவற்றிலே சில பல பிரதாப முதலியார் சரித்திரத்தைவிடச் சிறந்தனவாகவும் உயர்ந்தனவாகவும் இருக்கின்றன. ஆனால் நாவல் என்னும் இந்தப் புதிய துறையைத் தமிழ் மொழியில் முதலில் உருவாக்கிச் செப்பனிட்டு அழகுபடுத்தி ஓர் அமைப்பாக்கித் தந்தவர் வேதநாயகம்பிள்ளை.

பெருமரங்கள் பல அடர்ந்து செறிந்து மிடைந்து திணைந்து கிடக்கும் காட்டுக்கு நடுவே, அவற்றில் பலவற்றை வெட்டி வீழ்த்தி, தரையை ஒழுங்குபடுத்தி ஒரு புதிய பாதையை அமைப்பதுதான் மிகச் சிரமமான பணி. அமைத்துவிட்டால் அதன் பிறகு அந்தப் பாதைக்குத் தார்ரோட் போடலாமா அல்லது கான்க்ரீட் அமைக்கலாமா, அகலம் 30 அடி போதுமா அல்லது 50 அடி ஆக்கலாமா, நீளம் இரண்டு மைல் போதுமா அல்லது மூன்று மைல் வேண்டுமா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து அதன்படி அமைப்பது அத்துணைச் சிரமமான செயலாகாது.

முதலில் பாதையை அமைத்தவர் வேதநாயகம். பிறகு வந்தனர் பலர்—கான்க்ரீட் போடவும், தார்ரோட் அமைக்கவும், சாலையின் இருபுறமும் பூந்தொட்டிகள் வைக்கவும், இடை இடையே சோர்வுற்றோர் அமரப் பலகைகள் அமைக்கவும்.

தமிழ் நாவலின் தந்தை வேதநாயகனுர். அதுமட்டுமல்ல. தமிழ் மொழியில் வேறு பல வசன ஏடுகளையும் கவிதைச் சுவடிகளையும் தீட்டியிருக்கிறுர் அவர். 'சுகுணசுந்தரி' என்பது அவர் இயற்றிய மற்றொரு தமிழ் நாவல். 'நீதிநூல்' என்பது அவர் இயற்றிய சிறந்ததோர் கவிதை ஏடு. உலக வாழ்க்கையின் பற்பல துறைகளைப் பற்றி அருமையான நீதிகளை அமைத்து இனிமையான முறையில் தீட்டப்பட்ட கவிதைகள் ஏராளம் இந்தச் சுவடியில். சிந்தனைக்கு விருந்து தரும் சிறப்புமிக்க ஏடு இது.

தமிழிலே இசையா? நடக்கிற காரியமா?

கச்சேரிகளை கட்டத் தேவையான அளவு கீர்த்தனைகள் தமிழிலே உண்டா?

ஏதோ கச்சேரியை முடித்துவிட்டு வித்வான் எழுந்துபோகிற நேரத்திலே ஒரு சில தமிழ்த் துக்கடாக்களைப் பாடலாம். ஆனால் கச்சேரி முழுவதும் தமிழ் இசையா? அது எப்படி முடியும்?

ஏனய்யா வீண் கிளர்ச்சி? ஏதப்பா உங்கள் தமிழிலே போதுமான கீர்த்தனைகள்?

என்னதான் சொல்லுங்கள். தியாகய்யர் கீர்த்தனைகளை நாடாமல் உங்கள் கச்சேரியை நடத்தினுல் அது சோபிக்கவே சோபிக்காது.

இப்படியெல்லாம் பேசினரல்லவா சிலர் பத்து ஆண்டுகளுக்கு முன்பு! இசை தமிழில் இருப்பதா? கூடாது ஆகாது என்றெல்லாம் முழங்கினரல்லவா? ஏனப்பா கூடாது என்று கேட்டால், தமி

ழிலே, அதற்குப் போதுமான கீர்த்தனைகள் இல்லை என்று இழி சொல் வீசினரல்லவா?

இந்த இழிசொல் முற்றிலும் பொய்யானது. முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதி, பாரதிதாசன், தேசிக விநாயகம் பிள்ளை முதலிய பலர் இயற்றிய பற்பல கீர்த்தனைகள் அப்போதே இருக்கத்தான் செய்தன. இவர்கள் மட்டுமா? அறிஞர் வேத நாயகம் அவர்களும் எத்தனையோ பல கீர்த்தனைகளை, எளிய சொற்களால், குழைவும் நெளிவும் சுவையும் அழகும் பொலியும் வகையில் தீட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்.

"தமிழிலா? இசையா? எப்படி முடியும்? ஏது கீர்த்தனைகள்" என்கிற ஓர் இழிசொல்—இழிசொல்லா, கடும் புயல்—இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிளம்பக்கூடும் என்பதைத் தெரிந்துதானோ என்னவோ, 19–ம் நூற்றாண்டில் வாழ்ந்த வேத நாயகனார், அந்தக் காலத்திலேயே, இத்தகு குணசீலர்களின் வெட்டிப் பேச்சை மட்டந்தட்டுவது போல, செந்தமிழ்க் கீர்த்தனைகளை, இசைப் பாடல்களை, ஏராளமாக இயற்றியிருக்கிறார்.

இந்தக் காலத்தில் மூண்டெழுந்த தமிழ் இசை இயக்கத்திற்கு அந்தக் காலத்திலேயே வேதநாயகனார் இயற்றிய அரும்பணி இது. தமிழ் இசையின் சிறப்புக்கு மட்டுமா, தமிழ் மொழியின் பெருமைக்கே ஆக்கந் தரும் அருஞ்செயல் அல்லவா இது?

மாறுதல் என்றாலே மிரண்டு ஓடும் பழமைப் பித்தர்கள் போன்ற மனவளம் படைத்தவரல்லர் வேதநாயகனார். சீர்திருத்த ஆர்வம் நிறைந்தவர். தேவையான மாறுதல்களை ஏற்றுக் கொள்ளத் துளியும் தயங்காதவர். தீங்கு தரும் பழைய எண்ணங்களையும் ஏற்பாடுகளையும் சிறிதும் அஞ்சாமல் வெட்டி வீழ்த்திடும் வீர உள்ளம் படைத்தவர்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்கிற மனப்பான்மை தமிழகத்தில் ஆழமாகக் கால் ஊன்றிக்கொண்டு அகல மாகப் பரவியிருந்த காலம் அது. "பெண்களா—படிப்பதா—ஐயய்யோ—ஆபத்தாயிற்றே அது!" என்று ஏறத்தாழ எல்லோருமே எண்ணிக் கொண்டிருந்த நேரம். பெண்கள் படித்து விட்டால் அந்தப் படிப்பு அடுத்த வீட்டுப் பிள்ளைக்குக் காதல் கடிதம் எழுதத் தானே பயன் படும்—ஏன் அந்த ஆபத்து—எதற்காக இந்த விபரீதம் என்று கைகளைப் பிசைந்தபடி, சில சமயம் கண்களை உருட்டியபடி, பெரிய மனிதர்கள் பேசிக் கொண்டிருந்த சகாப்தம். எண்ணறக் கற்று எழுத்தறப் படித்தாலும் பெண்புத்தி பின் புத்தி தானே —இதற்கு ஏனப்பா நாட்டின் செல்வத்தை வீணாக்க

வேண்டும் என்று மூதியவர்கள் பலர் தங்களுக்குத் தெரிந்த அர்த்த மற்ற பொருளாதார அறிவை அவசர அவசர மாகப் பறை சாற்றிக் கொண்டிருந்த நேரம்.

இப்படிப்பட்ட காலத்தில்தான் அறிவு ஒளி வேதநாயகனார் துணிச்சலுடன் முன்னால் வந்து, பெண்கள் உலகத்திற்குக் கல்வியை அளித்தே தீர வேண்டும் என்று வீர முழக்க மிட்டார். **பெண் கல்வி, பெண் மனம், பெண் மதி மாலை** முதலிய பல புத்தகங்கள் எழுதி, ஒவ்வொன்றிலேயும், பெண்கள், அடுக்களைக்கு மட்டுமே பயன்படும் பண்டங்கள் என்கிற பத்தாம்பசலிக் கருத்தைச் சுக்கு நூறாக்கினார் வேத நாயகம்.

இந்தக் காலத்திலே இது ஒரு பிரச்சினையாகவே தோன்றாது. பெண் கல்வியின் பெருமையை எடுத்துச் சொல்லி அதற்கு ஆதரவு தேடுவது ஒரு தைரியமுள்ள செயலாகவும் கருதப்படமாட்டாது. ஏனெனில் இது போது பெண்கல்விக்கு எதிர்ப்பு என்பதாக ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை. எவ்வளவு வைதீக வெறி பிடித்த பெற்றோர்களும் கூட சிறிதளவாவது தங்கள் பெண்கள் படித்திருந்தால்தான் அவர்களுக்குப் பின்னால் தகுந்த மாப்பிள்ளை கிடைப்பான் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு தவறாமல் தங்கள் பெண்களைப் பள்ளிக்கு அனுப்பும் காலம் இது. ஊர்கள் தோறும் பெண்கள், பள்ளிகளும், சென்னையில்பல பெண் கல்லூரிகளும் ஏற்பட்டு, எங்கு பார்த்தாலும் பெண்கள், கட்டுப் புத்தகங்களுடன் வரிசை வரிசையாகப் பள்ளிக்கூடம் செல்லும் காட்சியை நித்தமும் நாம் கண்டு வரும் சகாப்தம் இது. ஆனால் வேத நாயகனார் காலம் அத்தகையதா? பெண்ணுக்கும் கல்வி வேண்டும் என்று வாயைத் திறந்து சொல்லி விட்டால் "யாரடா நீ நாத்திகன்? ஏனடா உனக்கு இந்தக் கெடுமதி?" என்கிற இடி இடித்து, இழி மொழி மின்னி, ஏசல், மழையாகப் பொழிந்த காலம் அது. அத்தகு காலத்தில் வேத நாயகனார் இத்தகு பிரச்சனைக்காக எழுத்துப் போர் தொடுத்தார் என்றால், அதனை நாம் நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும். வாழ்க அவர்தம் சீர்திருத்த உள்ளம் என்று மனமார வாழ்த்தத்தான் வேண்டும். எழுத்திலேயும் பேச்சிலேயும் பெண் கல்வியை வற்புறுத்தியதோடா நின்றார் அவர்? தானே முன் நின்று பெண்கள் பள்ளி ஒன்றை நடத்தியிருக்கிறார். தன்னுடைய பெண்களையும் பள்ளிக்கு அனுப்பியிருக்கிறார். ஆம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடும் ஊருக்கு உபதேசியாக இருக்க வில்லை அவர். நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு உரைத்து, உரைத்த வண்ணம் நடந்திடும் உள்ள உறுதி மிகுந்தவராயிருந்தார் வேத நாயகம்.

மதத்தால் கிறித்தவர் வேத நாயகம். ஆனால் கிறித்தவம் தவிர ஏனைய நெறிகள் மீதெல்லாம் சீறிப் பாய்கிற சிறுமதி அவரிடம்

இருந்ததில்லை. எம் மதமும் சம்மதம் என்கிற சமரச சன்மார்க்க செந் நெறிச் சீலராக விளங்கினார். அவர் கிறித்தவ மதம் ஒன்றே தழைக்கவேண்டும்— ஏனைய மதங்கள் யாவும் அழிந்தே தீர வேண்டும் என்கிற தீய உள்ளம் அவரிடம் இருந்திருந்தால், அவர் எப் படி அந்தக் காலத்துத் திருவாவடுதுறை மடத்துத் தம்பிரான் சுப் ரமண்ய தேசிகரோடு மிக நெருங்கிய நட்புரிமை பூண்டு இறுதி வரையில் அந்த நட்பைப் போற்றிப் பாதுகாத்திருக்க இயலும்? அவர் இயற்றிய கீர்த்தனைகள் பல கொண்ட ஓர் தொகுப்பு நூலுக்கு **"சர்வ சமய சமரச கீர்த்தனைகள்"** என்கிற பெயரை அவர் சூட்டியதிலிருந்தே அவருடைய உள்ளத்தில் சமரச நெறி தவழ்ந்தது என்கிற தூய உண்மை திட்டமாகத் தெரிகிறதல்லவா?

அரும்பணி பல புரிந்த அறிஞர் வேத நாயகம் திருச்சி நகருக்கு அருகில் உள்ள குளத்தூர் என்னும் கிராமத்தில் பிறந் தார். 1826ம் ஆண்டில் தமிழகத்தில் தோன்றிய அந்தப் பெருந் தகை, சவரிமுத்துப் பிள்ளை—ஆரோக்கிய மேரி என்னும் தம்பதி களுக்குப் பிறந்த தனிப் பெருஞ் செல்வம். தன்னுடைய பத்தாவது வயது வரையில் உள்ளூர்ப் பள்ளியில் பயின்று, பிறகு, சென்னை மாநிலத் தென்பகுதி நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளராக விளங்கிய தியாகப் பிள்ளை என்பவரிடம் ஆங்கிலமும் தமிழும் தெள்ளிதிற் கற்றறிந்தார் வேத நாயகம். 1848ல் நீதி மன்றம் ஒன்றில் பத்திரப் பதிவாளராக அமர்த்தப்பட்டு, இரண் டாண்டுகளுக்குப் பிறகு திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் (District Munsiff Court) மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார்-படிப் படியாகத் தன் நிலையில் உயர்ந்து 1857ல் தரங்கம் பாடியில் ஜில்லா முன்சிப்பாக நியமிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்குப் பிறகு மாயவரம் ஜில்லா முன்சீப்பாக மாற்றப் பட்டார். அது முதல் 1872ல் அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவரையில் மாயவரம் நீதிபதியாகத் தொடர்ந்து விளங்கி, அந்த வட்டாரத்து மக்களின் பேரன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரியவரானார்.

அறநெறி தவறாமல், ஒழுங்கு முறை வழுவாமல், நீதி வழங்கிய நற்சிறப்புடையவர் வேத நாயகம் என்கிற உயர்ந்த புகழ், அவருடைய வாழ் நாட்களில் மட்டும் ஒளி வீசிப் பிறகு மங்கிவிட வில்லை. இந்தக் காலத்திலேயும் மாயவரம் வட்டாரத்தில் அந்தப் புகழ் குன்றாது குறையாது மங்காது மறையாது நிலவி வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி அல்லவா?

23-7-1939 அன்று, முதல் தமிழ் நாவலாசிரியர்-The First Tamil Novelist என்கிற தலைப்பின் கீழ் அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் அரும்பெருந் தொண்டினையும் அழகுபட விளக்கிய "ஹிந்து" நாளிதழ், அந்தக் கட்டுரையில் ஓரிடத்தில் In 1860 he

was transferred as District Munsiff of Mayavaram and the People there talk to this day of the remarkable manner in which he meted out justice in accordance with the principles laid down by him in his own master piece "Nithinul" என்று எழுதியிருந்தது. "1860ல் மாயவரம் மாவட்ட நீதிபதியாக அவர் மாற்றப்பட்டார். ஆனால் அங்கேயுள்ள மக்கள் இந்தக் காலம் வரையிலும்கூட, அவர் அந்தக் காலத்தில், தான் இயற்றிய நீதிநூல் என்னும் ஒப்பற்ற சுவடியில் குறிப்பிட்டிருந்த உயர்ந்த நீதிமுறைகளின்படியே தன்னுடைய நீதி மன்றத்தில் நீதிவழங்கிய தனிச் சிறப்பைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்" என்று 1939–ல் "ஹிந்து" எழுதுகிறது என்றால், அந்தப் புகழுரை, வெறும் முகமன் உரை அல்ல, முற்றிலும் உண்மை என்பது எழில்பட விளங்குகிறதல்லவா? ஒரு தனி மனிதர் நீதிபதியாக இருந்து அறநெறி தவறாமல் முறை வழங்கிய சிறப்பைக் குறித்து, அவர் நீதிபதியாக இருந்து 80 ஆண்டுகள் கழிந்த பிறகும் கூட, அவர் மாண்டு மறைந்து மண்ணோடு மண்ணாகிவிட்ட பல ஆண்டுகட்குப் பிறகும்கூட மக்கள் பேசுகின்றனர் என்றால் அது எப்படி வெறும் முகமனுரையாக இருத்தல் இயலும்!

அவருடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கப் பார்க்க, தொட்டனைத்து ஊறும் மணற் கேணி போலப் பற்பல அரிய நிகழ்ச்சிகள் நம் மனக்கண்முன் தோன்றுகின்றன. அவர் மாவட்ட நீதிபதியாக விளங்கியபோது கடுமையானதோர் பஞ்சம் மூண்டெழுந்து, சீறும் புயலெனப் பரவி, கொடிய மலைப்பாம்பென மக்களை நெருக்கி, பெரியதோர் வெள்ளம் போல் எவரையும் எதனையும் அள்ளி விழுங்கிக்கொண்டு பயங்கர ஆட்சி நடத்தலாயிற்று. அந்த நேரத்தில், வேதநாயகனார், தன்னுடைய சொந்தச் செலவில் கஞ்சித் தொட்டி ஒன்றை வைத்து, நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவளித்து அவர்களை மரணத்தின் இரும்புப் பிடியிலிருந்து மீட்டிருக்கிறார்.

சிறிது காலம் அந்த அறிவுச் செம்மல், மாயவரம் நகராட்சி மன்றத் தலைவராக இருந்து நகர முன்னேற்றத்திற்கான நற்செயல்களிலும் ஈடுபட்டிருக்கிறார்.

1826–ல் பிறந்து 1889–ல் உயிர்நீத்த அந்த அறிஞரேறு, தமிழ் மக்களால்—தமிழ் நாட்டால்—தமிழ் மொழியால் என்றென்றும் மறக்கமுடியாத ஓர் மாபெரும் செல்வம் என்பதை யார் மறக்க முடியும்?

மறப்பவர், தமிழராக எப்படி இருக்கமுடியும்?

வாழ்க வேதநாயகனார் தொண்டு! வளர்க அவர்தம் அரும்புகழ்!

# புகையிலை மண்டலம்!

—[ தொண்டைமான் ]—

திராவிடத்தின் புகையிலை மண்டலத்தைக் காண விரும்புகிறீர்களா? வாருங்கள் செல்வோம். மேற்குக் கடற்கரையைவிட்டுக் கிழக்கே வாருங்கள். சோழ மண்டலக்கரை என்று அழைக்கப்படும் கிழக்குக் கடற்கரை ஓரமாக, இப்போது வடக்கு நோக்கிப் பயணம் செய்யலாம். இக்கடற்கரையின் நீளம் 1600 மைல். இதில் சுமார் 1000 மைல்களைக் கடந்ததும் சின்னஞ்சிறு சிங்காரமான தீவுக்கூட்டங்களைப் பார்க்கிறோம். அவைதான் 'லங்காத் தீவுகள்'. சற்றுக் கூர்ந்து கவனித்தால் அவ்விடத்திலே ஒரு நதி கடலோடு கலந்துகொண்டிருப்பதைக் காணலாம். அது கோதாவரி நதி.

அழகான அந்த லங்காத் தீவுகளைவிட்டு, கோதாவரி நதியின் வழியே இனி மேற்கே செல்லலாம். கொஞ்சதூரம் சென்றதும் எதிரே ஒரு நீண்ட மலைத் தொடர் தென்படுகிறது. இது கிழக்குத் தொடர்ச்சி மலை. இம் மலைத் தொடருக்கும் கடலுக்கும் இடையே வளம் மிகுந்த சமவெளி இருக்கிறது. இந்தச் சமவெளியின் இயற்கைக் காட்சிகளைப் பார்த்தபடி மீண்டும் தெற்கு நோக்கிப் புறப்படலாம். கோதாவரி, கிருஷ்ணா மாவட்டங்களைக் கடந்து, குண்டூர் மாவட்டத்திலே புகலாம்.

மாலை நேரம். மறைந்துகொண்டிருக்கும் கதிரவனின் செந்நிறமான ஒளி. நீலநிற வானம். கருமையான மலைகள். இவற்றால் சூழப்பட்டிருக்கும் பசுமையான வயல்கள். வயலிலே பூத்துக் குலுங்கி மணம் வீசி நிற்கும் வெண்மையான புகையிலைப் பூக்கள். அருகே வரிசை வரிசையாகத் தொங்கிக் கொண்டிருக்கும் பொன்னிறமான புகையிலைப் பாளங்கள். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இந்த வண்ணக் காட்சிகளைக் கொண்ட குண்டூர் மாவட்டத்தை விட்டு நேரே கோவை செல்வோம். கோவையிலிருந்து திருச்சி, திருச்சியிலிருந்து மதுரைக்கு வருவோம்.

இங்கெல்லாம் ஏராளமான புகையிலைத் தோட்டங்களைக்கண் குளிரக் காண்கிறோம். மதுரை, திருச்சி, கோவை—இவற்றோடு, லங்காத் தீவுகளும், எழில்மிக்க குண்டூர் மாவட்டமும் உலகப் புகழ்பெற்ற புகையிலை மண்டலங்கள்! நீங்களும், நானும் ஒருவேளை இவற்றை அறியாதிருக்கலாம். ஆனால் உலக வணிகர்கள் இந்த உன்னதமான பூமியை

மிக மிக அறிந்திருக்கிறார்கள். இதன் வளத்தையும், வளப்பையும், சிறப்பையும் அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். காரணம், இங்கே விளையும் புகையிலை உலகிலேயே மிகச் சிறந்ததாக இருப்பது மட்டுமல்லாமல் நமது புகையிலை ஆங்கிலேயரின், ருஷ்யரின் வாயிதழ் ஓரத்திலே சிகரெட்டாகப் புகைந்து கொண்டிருப்பதுதான்.

நம்மிலே பலர்கூட நம்பமாட்டார்கள் இதை. 'வில்சு'ம், 'கோல்டு பிளேக்கு'ம் வேறு பல விலையுயர்ந்த சிகரெட்டுகளும் வெளிநாட்டில் இருந்துவருகிறது என்று எண்ணிக்கொண்டு, மதிப்பிற்காக—அல்லது மாற்றமுடியாத பழக்கத்தால் – நண்பர்கள் சிலர் புடைசூழச் சிகரெட்டும் கையுமாக உள்ளத்தை எங்கோ 'பறக்கவிட்டு', நடுத்தெருவிலே பவனிவரும் நண்பர்கள்கூட, நாம் சொல்வதைக் கனவோ, கட்டுக்கதையோ என்றுகூட நினைக்கக் கூடும்.

திராவிடத்திலே விளைவது உலகப் புகழ்பெற்ற வர்ஜீனிய சிகரெட் புகையிலை என்பது (அவர்களுக்குத்) தெரிந்திருந்தால், ஆண்டுதோறும் ஐந்து கோடி ராத்தலுக்குக் குறையாமல் திராவிடத்தின் புகையிலை இங்கிலாந்து செல்கிறது என்ற உண்மையை உணர்ந்திருந்தால் அவர்கள் அப்படி நினைக்கமாட்டார்கள்!

500 ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ், அங்கே இயற்கையாக விளைந்து கொண்டிருந்த புகையிலையைக் கண்டான். மேற்கிந்தியத் தீவுகளிலே வாழ்ந்து கொண்டிருந்த மக்கள், ஆண்டவனைத் துதிக்க ஆலயத்திற்குச் சென்று, விழாக் கொண்டாடிய வேளையிலே அவர்கள் அந்த இலையைச் சுருட்டி, சுருட்டாக்கிப் புகைவிடுவதைக் கண்டான்—வியந்தான். அவனது முயற்சியால் புகையிலை ஐரோப்பாவில் பரவியது. 'டுபாகோ' (Tobago) என்ற அச்சிறு தீவிலே அது காணப்பட்ட காரணத்தால் அதை "டுபாக்கோ" (Tobacco) என்று ஐரோப்பியர் அழைக்க ஆரம்பித்தனர்.

1580-ம் ஆண்டில் திராவிடத்திற்கு வந்த, போர்த்துகீசிய மாலுமிகள் இங்கே புகையிலைப் பயிரிட்டுச் சென்றார்கள்—இங்கிருந்து வடநாட்டுக்கு பின்பு சென்றது. புகைக்க உபயோகப்பட்டதால் புகை + இலை = புகையிலை என்று அதற்குத் தமிழர் பெயர் சூட்டினர்.

திராவிடத்திலே புகையிலைத் தோட்டங்கள் தோன்ற ஆரம்பித்தன. உலகிலே புகையிலைப் 'பக்தர்'களும் பெருக ஆரம்பித்தார்கள். உலகச் சந்தையிலே புகையிலைக்கும் மிகப் பெரிய கிராக்கி ஏற்பட்டது.

கொலம்பசுக்குப்பின் அமெரிக்காவிலே குடியேறிய ஆங்கிலேயர் அங்கே ஏராளமான புகையிலைத் தோட்டங்களை உண்டாக்கினர். புகையிலை உற்பத்தி

யில் அமெரிக்கா, முயல் வேகத்திலும், திராவிடம் ஆமை வேகத்திலும் முன்னேறிக் கொண்டிருந்தன.

முன்னூறு ஆண்டுகள் மறைந்தன. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது. பிரிட்டனில் உள்ள சிகரெட் தொழிற்சாலைகளுக்காக, திராவிடத்திலே புகையிலைப் பயிர் செய்வதற்கு ஊக்கமும், உதவியும் காட்டினார்கள். அதிலே சுயநலமும், சுரண்டலும் கலந்திருந்தாலும் திராவிடத்திலே புகையிலை உற்பத்தி பெருகியது. பெருகிய காரணத்தால் புகையிலை விளைவிப்பதில் அமெரிக்காவோடு சரிசமமாகப் போட்டி போட ஆரம்பித்துவிட்டது, திராவிடம்!

நமது புகையிலை மண்டலங்களிலே இப்போது சுமார் 2,25,000 ($2\frac{1}{4}$ லட்சம்) ஏக்கர்களிலே புகையிலைத் தோட்டங்கள் உள்ளன. லங்காத்தீவுகள், மேல் கோதாவரி, கீழ்க் கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா, மதுரை, திருச்சி, கோவை, தஞ்சை ஆகிய மாவட்டங்களிலே இத் தோட்டங்கள் மிகுதி. வண்டல் படிந்த வளமான நிலங்கள் இவை.

பருத்தி விளைந்த பின்பு இந்நிலங்களிலே புகையிலை வித்துக்களை தெளிக்கிறார்கள். விதை நாற்றாகிறது. நாற்றை எடுத்து வரிசை வரிசையாக நடுகிறார்கள். நீரைப் பாய்ச்சி நல்ல உரம் இடுகிறார்கள். செடி வளர்கிறது.

இலைகள் தோன்றுகின்றன. வாழை இலை போன்று விரிந்து அகன்ற பசுமையான இலைகள் அவை. ஏழு அல்லது எட்டு வாரத்திற்குள் செடியிலே வெண்மையான பூக்கள் பூக்கின்றன. இலை முதிர்கிறது. பச்சை நிற இலைகள், இப்போது மாறி, பளபளப்பான மஞ்சள் நிறத்தை அடைகின்றன.

இலைகளைப் பறித்து, இரண்டு மூன்றாய்ச் சேர்த்து கழிகளிலே கட்டி விட்டு, வெயிலிலே உலர்த்துகிறார்கள். வேலை இத்துடன் முடிந்து விடவில்லை. உலர்த்திய பின்புதான் முக்கிய வேலைகள் உள்ளன.

உலர்த்தப்பட்ட இலைகளைப் பாடம் செய்யவேண்டும். இதற்காக இந்த இலைகளை பெரிய களஞ்சியங்களிலே நிரைய அடுக்குகிறார்கள். களஞ்சியத்தோடு இரும்புக் குழாய்கள் பல இணைக்கப்பட்டிருக்கும். களஞ்சியங்களுக்கு வெளியே பல உலைக்களங்களும் இருக்கும்.

இந்த உலைக்களத்திலே நிலக்கரியைப் போட்டு எரிப்பார்கள். இந்த வெப்பம் இரும்புக் குழாய்களின் வழியே களஞ்சியத்தை அடையும். அதே சமயத்திலே வேறு குழாய்கள் மூலம் சில வகைத் திரவங்களும் அதில் செலுத்தப்படும். இந்தத் திரவத்தாலும் வெப்பத்தாலும் களஞ்சியத்திலே உள்ள புகையிலை மிக உயர்ந்த முறையிலே பாடம் ஆகிறது. இப்போதுதான் புகை நிறத்திலே பொன் மயமாகிறது.

எவ்வளவு சூடு ஏற்றப்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு

புகையிலையின் தரமும், நிறமும் உயரும். 85 டிகிரி முதல் 110 டிகிரி வரை புகையிலை பழுப்பான மஞ்சள் நிறத்திலே இருக்கும். 120 டிகிரிமுதல் 140 டிகிரிவரை சூடேறும் புகையிலைதான் தரத்திலே உயர்ந்து பவுன் நிறத்தை அடையும்—இதில்தான் சிகரெட் செய்யப்படுகிறது.

புகையிலை உற்பத்தியிலே இந்தியாவிலும், உலக நாடுகளிலும் திராவிடத்திற்கு உள்ள தனிச் சிறப்புகள் பலப் பல.

இந்திய உப கண்டத்திலேயே புகையிலை விளைவிப்பதில் இன்று முதலிடம் வகிப்பது திராவிடம் தான். வடக்கிலே உள்ள மாகாணங்கள் எல்லாம் இதைவிடக் குறைவாகவே விளைவிக்கின்றன. வடக்கே ஐந்தாறு பெரிய மாகாணங்கள் சேர்ந்து விளைவிக்கும் புகையிலையைவிட திராவிடத்திலே அதிகமான புகையிலை விளைகிறது.

புகையிலை உற்பத்தியில் உலகமறிந்த உலகப் புகழ்பெற்ற நாடுகள் நான்கு. ஒன்று வர்ஜீனியா, இன்னொன்று துருக்கி. மற்றொன்று டென்னசி. அடுத்தது திருவிடம்!

புகையிலையில் இரண்டு முக்கிய வகைகள் உண்டு. ஒன்று ரூஸ்டிகா மற்றொன்று டபாக்கம் (Tabacum). ரூஸ்டிகா மட்ட ரகத்தைச் சேர்ந்தது. டபாக்கம் மிக மிக உயர்ந்த ரகம். இதைக் கொண்டுதான் சிகரெட் செய்யப்படுகிறது. டபாக்கம் விளைவது தெற்கே! மட்டரக ரூஸ்டிகா விளைவது வடக்கே!

உயர்ந்தரக சிகரெட் புகையிலை முழுதும் திராவிடத்திலேதான் உற்பத்தியாகிறது (95%). வடக்கே அநேகமாக இந்த வகை இல்லை என்றே சொல்லிவிடலாம்!!

சுருட்டுக்குத் தேவையான "சொருட்" புகையிலையும் திராவிடத்திலேதான் மிகுதி. திருச்சியிலும், திண்டுக்கல்லிலும் சொருட் வகை விளைகிறது.

மோகன்லால் பாரிக் — என்ற வடநாட்டுப் புகையிலை நிபுணர், திராவிடப் புகையிலையைப்பற்றிக் குறிப்பிடும்போது,

"இந்தியப் புகையிலை உற்பத்தியில் மிக மிக முக்கியமான மாகாணம் சென்னை. மொத்தத்தில் 45 சதவீதத்தை சென்னை ஒன்று மட்டுமே விளைவித்து விடுகிறது. இன்னொரு கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், சிகரெட்டுக்கு உபயோகமாகும் உயர்ந்தரக வர்ஜீனியப் புகையிலையில் 95 சதவீதத்திற்கு மேல் அதே சென்னை உற்பத்தி செய்துவிடுகிறது. உலக மார்க்கெட்டிலும் சென்னைப் புகையிலைக்கு அளவு கடந்த கிராக்கி இருக்கிறது" என்று எழுதுகிறார்.

தாஸ்குப்தா (Dasgupta) என்ற மற்றொரு வடநாட்டு பூகோளப்பொருளாதாரப் பேராசிரியரும் "உயர்ந்தரகப் புகையிலை உற்பத்திக்கு ஒரு இடம் உண்டு

என்றால் அது சென்னை" என்று கருத்துப்பட எழுதியிருக்கிறார்!

இந்த உயர்ந்தரகப் புகையிலைகளில் ஆண்டுக்கு 25,000,0000 (25 கோடி) ராத்தல்களுக்குமேல் நமது திராவிடத்தில் உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது! இவை பின்பு சிகரெட்டாக, சுருட்டாக, பீடியாக, பொடியாகவெல்லாம் மாற்றப்படுகிறது.

சிகரெட் :—சிகரெட்டுக்குத் தேவையான வர்ஜீனிய டபாக்கம் புகையிலைமட்டும் 1,48,000 ஏக்கரில் 9 கோடி ராத்தலுக்கு மேல் உற்பத்தியாகிறது. இதில் சுமார் 5 கோடி ராத்தலை இந்திய சிகரெட் கம்பெனிகள் எடுத்துக்கொள்கின்றன. இந்திய சிகரெட் கம்பெனிகள் இந்தப் புகையிலையைக்கொண்டு ஆண்டுதோறும் 2150 கோடிக்கு மேற்பட்ட சிகரெட்டுகளை உற்பத்தி செய்கின்றன. மொத்தம் 20 சிகரெட் கம்பெனிகளில் 18 வடக்கே இருக்கின்றன. இரண்டு கம்பெனிதான் தெற்கே இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று நாமே யூகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

சுருட்டு :—தென்னாட்டிலே சுருட்டுக் கம்பெனிகள் ஏராளம். இவை அனைத்தும் திராவிடர் கையிலே உள்ளன. உறையூர்ச் சுருட்டு உலகப்புகழ் பெற்றது. திண்டுக்கல் சுருட்டும் மிகவும் உயர்ந்தது. இன்னும் இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கின்றன.

பீடி :—பீடிப் புகையிலையும், பீடித் தொழிற்சாலைகளும் பம்பாயிலே சற்று அதிகம். தெற்கே இப்போது நாள்தோறும்தோன்றிக்கொண்டிருக்கின்றன. இது குடிசைத் தொழிலாகவும், பெரிய அளவிலும் நடத்தப்படுகிறது. திருச்சி போன்ற இடங்களில் இத்தொழிலை நம்பி வாழும் ஏழை மக்கள்—முக்கியமாக ஏழை முஸ்லீம்கள் மிக மிக அதிகம்.

பொடி:—பொடிக்கேற்ற புகையிலை ரகமும், பொடி உற்பத்தியும் திராவிடத்திலே தான் மிகுதி. வடக்கே ஒன்பதே கம்பெனிகள் இருக்கும்போது, திராவிடத்திலே 22க்கு மேற்பட்ட பொடிக் கம்பெனிகள் உள்ளன.

திரவமும், உப்பும்:—புகையிலையில் 'நிக்கோடினிக்' என்ற திரவமும், 'நிகோடினிக் சால்ட்'என்ற உரஉப்பும் தயார் செய்யமுடியும். இவற்றைக் கழித்தெறிந்த புகையிலையைக்கொண்டே செய்யலாம். அர்ஜன்டைனா அரசாங்க விஞ்ஞான இலாகா—அண்மையில் இந்த உண்மையைக் கண்டு பிடித்து வெளியிட்டுள்ளது.

இவை தவிர வெற்றிலை, பாக்குடன் சேர்த்து மெல்லுவதற்கேற்ற புகையிலையையும் பல கம்பெனிகள் தமிழகத்திலே தயாரிக்கின்றன.

நாம்; நமது புகையிலை மண்டலங்களின் மூலம் 25 கோடி ராத்தல் புகையிலையை உற்பத்தி செய்கிறோம். இதில் 18 கோடி ராத்

தல் திராவிடத்திலும், வடநாட்டிலும் செலவழிந்து விடுகிறது. மிகுதி 7 கோடி ரூபாய்க்கான திராவிடப் புகையிலையை இப்போது ஏற்றுமதி செய்கிறோம். திராவிடப் புகையிலையின் மொத்த மதிப்பு சுமார் 50கோடி ரூபாய்!

ருஷ்யா, ஜப்பான், பிரிட்டன், ஹாங்காங்—முதலிய நாடுகள் திராவிடப் புகையிலையை ஆண்டு தோறும் போட்டி போட்டுக் கொண்டு வாங்குகின்றன.

1945–ல் இந்திய அரசாங்கம் "இந்திய புகையிலைக் கமிட்டி"யை நியமித்தது. புகையிலையின் தரத்தை உயர்த்துவதும், விளைவைப் பெருக்குவதும், வெளிநாட்டில் சந்தை தேடலும்—இக் கமிட்டியின் வேலைகள்.

**டில்லி அரசாங்க வரிகள் :—**

இந்திய அரசாங்கம் பல கட்டங்களில் இதற்கு வரிப் போட்டிருக்கிறது. இது போதாதென்று மேலும் ஒரு வரி—விற்பனை வரி விதிக்க சென்னை அனுமதி கோரியுள்ளது கிடைக்கும் என்றும் தெரிகிறது. வரிகள்:—

1. சிகரெட்டுக்கு 15% ஏற்றுமதி வரி.

2. ஏற்றுமதியாகும் புகையிலைக்கு விதிக்கப்படும் ½% "செஸ்" வரி.

3. இறக்குமதி செய்யப்பட்டால், புகையிலைக்கு 10%வரியும், புகையிலைப் பொருள்களுக்கு 16¼%ம் வரி.

4. உற்பத்தி வரி.

உற்பத்தி வரி (Excise)என்று கூறப்படும் இந்த வரி மூலம்தான் மத்திய அரசாங்கத்தின் கஜானா நிறைகிறது! உற்பத்தி வரிமூலம் கடைசிச் செய்திப்படி 34 கோடி ரூபாய் சர்க்காருக்குக் கிடைக்கிறது. இதில் திராவிடம் செலுத்தும் வரி சுமார் 15¾ கோடி ரூபாய்க்கு மேல்!!

பணத்தை விளைவிக்கும் இந்தப் புகையிலையை, நாம் விளைவிக்கத் தயங்கப்போவதில்லை. புகையிலை உடல் நலத்துக்கு நல்லதா—கெட்டதா என்ற ஆராய்ச்சியிலும் இறங்க வேண்டியதில்லை. ஏனென்றால்,

விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், காவி, கமண்டலமேந்திகள், மத குருக்கள் முதலியோரிலிருந்து, நாட்டின் ஒரு மூலையிலே நாலு முழக் கந்தையின்றி நானிலத்தை அறியாது ஒளிந்து கிடக்கிறானே, அந்த ஏழைவரை எல்லோருமே இன்று புகையிலைக்கு அடிமைகளெனலாம்.

ஒரு தமிழ்ப் புலவர் "புகையிலை விடுதூது" என்ற ஒரு நூலையே எழுதிவிட்டார். "வசிக்கும் முன்னை மழுங்காமை.......... நூல் கற்ற வித்துவான் நாசிக்குழ்க்கு பொடி", என்று பாடிவிட்டார்! எப்படியோ புகையிலை உலக மக்கள் அனைவரையும் கவர்ந்துவிட்டது. அதற்கு உலகிலே—உலகப் பொருள்களுக்குள்ளே—ஒரு தனி மதிப்பு,

பெருமை, புகழ் ஏற்பட்டுவிட்டது.

பணப் பயிராகிய புகையிலை சிறந்த செல்வப் பொருளாக மாறிவிட்டது. அதை உற்பத்தி செய்யும் நாடுகள் இன்று டாலர் சம்பாதிக்கின்றன. அந்தப் புகையிலை நமது தாயகத்திலே, திருவிடத்திலேயும் விளைகிறது — தேவைக்குமேல் விளைகிறது; 50 கோடி ரூபாய் மதிப்புள்ள புகையிலையாக விளைகிறது.

இரண்டேகால் ($2\frac{1}{4}$) லட்சம் ஏக்கரா உள்ள நமது புகையிலை மண்டலம் 50 கோடி ரூபாய் சம்பாதிக்கிறது! ஆச்சரியம்தான். ஆனாலும் உண்மை. நமது புகையிலை மண்டலம் மேலும் விஸ்தரிக்கப்பட்டால்............தரிசாகக் கிடக்கும் 250 லட்சம் ஏக்கரில், ஒரு 20 லட்சம் ஏக்கரிலாவது புதிதாக விளைவிக்கப்பட்டால்........எவ்வளவு கோடி ரூபாய்களும், டாலர்களும் திராவிடத்திலே குவியும் என்று எண்ணிப் பாருங்கள் !

இது அசல் சிவகிரி, இது வேதாரணியம் புகையிலை—விறுவிறுப்பானது காரம் + மணம் நிறைந்தது என்றெல்லாம் சொல்கிறார்களே, அந்தப் புகையிலையின்மேல் நம் சர்க்கார் கொஞ்சம் கவனம் செலுத்தினால் நிறைய பணம் கிடைக்கும். அதுமட்டுமல்ல, அந்தப் பணம் நம்மிடையே உலவவும் வேண்டும். அதைச் செய்வார்களா ? ★

—" தீப்பொறி "

" ஆரம்பக் கல்வி ஆபீஸ் "

※

94-95, புதுத்தெரு, மண்ணடி
சென்னை-1.

※

மாதாந்திரக் கணக்கு
அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-8

ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்டு
கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச்
சேர்க்கும் விண்ணப்பத்
தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட்
பண்டு சரிபார்த்தனுப்பும்
பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

Form of Certificate of Income.
வருமான
நற் சாட்சி பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0
(தபால் செலவு உட்பட)

※

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# பெரியோர் வாழ்க்கையில் சிற்சில ஏடுகள்

[ D. E. மாசிலாமணி, ஆசிரியர், விருதம்பட்டு ]

## 1. ஆபிரகாம் லிங்கன் :

அமெரிக்காவின் ஜனாதிபதியாயிருந்த ஆபிரகாம் லிங்கன் ஒரு நாள் தமது இரு புதல்வர்களுடன் ஒரு வீதியைக் கடந்து சென்று கொண்டிருந்தார். அந்த இரு சிறுவர்களின் அழுகைக் குரல் வழிப்போக்கர் ஒருவரின் கவனத்தை இழுத்தது. வழிப் போக்கர் லிங்கனை நோக்கி "இவர்கள் எதற்காக அழுது தொந்தரவு செய்கின்றனர்?" என்று வினவினார். அதற்கு லிங்கன் "உலகம் முழுவதிலும் நாம் எக் குற்றத்தைக் காண்கிறோமோ அதையேதான் இவர்களும் செய்து என்னைத் தொந்தரவு செய்கின்றனர்; என்னிடம் மூன்று வாதுமைக் கொட்டைகள் இருக்கின்றன. ஒவ்வொருவனும் தனக்கே இரண்டு கொட்டைகள் கொடுக்கவேண்டும் என்று பிடிவாதம் செய்கின்றான். இன்னும் அதிகம் வேண்டும்; இன்னும் அதிகம் தேவை என்ற கூக்குரலே இன்று உலகை அழித்து வருகிறது; தேசங்கள் தமக்கு இன்னும் வேண்டும் என்று சொல்லுகின்றன; செல்வர்கள் தமக்கு இன்னும் தேவை என்று முழங்குகின்றனர். வறியர்கள் தங்களுக்கு அதிகம் வேண்டும் என்று வாதாடுகின்றனர். அனை வரும் அதிகம் வேண்டும் என்று விரும்புவதாலேயே உலகம் அழியும் நிலையில் இருக்கிறது" என்று சொல்லிச் சென்றார்.

வேறோர் நாள் ஜனாதிபதி சில கனவான்களுடன் குதிரையில் சென்று கொண்டிருக்கையில் எளிய மனிதன் ஒருவன் நாட்டு அதிபதியைக் கண்டு தொப்பியைக் கழற்றி மரியாதை செய்தான். தலைவர் லிங்கனும் தமது தொப்பியைத் தூக்கி மிகப் பணிவாக மறுவணக்கம் புரிந்தார். அப்போது ஒரு ஆடம்பர கனவான் அலட்சியமாக லிங்கனை நோக்கி, "தலைவரே! இவனைப் போன்ற எளிய மனிதருக்கெல்லாம் தொப்பியைத் தூக்கி பணிவாய் வணக்கம் செய்யும் துன்பத்தை ஏன் வைத்துக் கொள்கிறீர்?" என்று சற்று பரிகாசமான குரலில் கேட்டார். உடனே ஜனாதிபதி, "நண்பரே! மரியாதை காட்டுதல் என்னும் உயர்ந்த நாகரீகத்தில் அந்த எளியவன் என்னிலும் சிறந்தவனாகக் காணப்படலாகாதென்று உணர்ந்தே அதனைத் தக்கபடி செய்தேன்" என்று விடை பகர்ந்தார். அறிஞர் லிங்கனின் இந்த நுண்ணறிவை வியவாதார் யார் இருக்கமுடியும்?

## 2. நெதர்லாந்து ராணி :

நெதர்லாந்து தேசத்து ராணியின் மாளிகையில் ஒரு நாள் டெலிபோன் மணி ஒலித்தது. திடுக்கிடும் சம்பவம் ஒன்றைப் போலீஸ் அதிகாரி யொருவர் இராணிக்குத் தெரிவித்தார்.

ராணியின் புதல்விகளான இரு இளவரசிகளும் பொது பாடசாலை வகுப்பு முடிந்தவுடன் பல சிறுமிகளுடன்சேர்ந்துகொண்டு, தெருவில் ஆடித்திரிந்துபொழுது போக்கியதுடன், பழக்கடை ஒன்றில் புகுந்து, பலவந்தமாக திராட்சைகூப் பழங்களைத் திருடித் தின்று கடைக்காரருக்குப் பெரும் தொந்தரவையும் விளைவித்தனரென்றும், தற்போது போலீஸ் காரியாலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு தங்கி இருக்கின்றனர் என்றும் அதிகாரி தெரிவித்தார். நெதர்லாந்து மகாராணி அவர்கள், சாதாரண குரலில், "இத்தகைய குற்றவாளிகட்கு நீங்கள் என்ன தண்டனை கொடுப்பதுவழக்கம்?" என்று கேட்டார். அதற்கு அதிகாரி "கள்வர்டும் குற்றத்தில் பிடிக்கப்பட்ட சிறுவர் சிறுமிகளை நாங்கள் இரண்டு மணிநேரம் போலீஸ்காரியாலயத்தில் வைத்திருந்து பின்பு அவர்கள் பெற்றோரிடம் அனுப்பிவிடுவோம்" என்றார். உடனே ராணி தெளிவான குரலில் "கள்வாடிய எல்லாக் குழந்தைகளையும் வழக்கப்போல் அவ்விடம் இரண்டு மணி நேரம் வைத்திருங்கள்; என் குழந்தைகளை மாத்திரம் மேலும் ஒரு மணி நேரம் வைத்திருக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார். பழக்கடைக்காரருக்கான நஷ்டத்தை உடனே கொடுக்கும்படி அரண்மனையிலிருந்து அதிகாரி யொருவர் அனுப்பப்பட்டார்.

## 3. காந்தியடிகள் :

காந்தியடிகளும் மனுபென் காந்தி அம்மையாரும் நவகாளி யாத்திரை செய்கையில் பல இடுக்கமான தெருக்களைக்கடந்து செல்ல நேரிட்டது. சில தெருக்கள் மகாத்மாவும் மனுபென்னும் சேர்ந்து நடப்பதற்குக்கூட போதுமான அகலமின்றியிருந்தன. எவ்விடத்தும் எந்தவித சிறு தூசியையும்கூட காணவிரும்பாத காந்தியடிகள் நவகாளியில் மிகவும் அசுத்தம் நிறைந்த தெருக்களைக் கடந்து செல்ல வேண்டி இருந்தது. ஒருசமயம் காந்தியடிகள் இலைகளைச்சேர்த்து செய்யப்பட்ட துடைப்பத்தினால் தெருவில் அலங்கோலமாய்க் கிடந்த சகலவித அசுத்தத்தையும், மலஜலக் குப்பையையும்அப்புறப்படுத்தி சுத்தப்படுத்தத் தொடங்கினார். இதைக் கண்டு மிகவும் திடுக்கிட்ட மனுபென் அம்மையார் உணர்வின்றி சிறிது நேரம் நின்றார். அங்கிருந்த கிராமவாசிகளும் புனிதரின் தொண்டைக் கண்டு மெய்மறந்து வாளா நின்றார்கள். மனுபென் அம்மை இந்தியத் தந்தையின் இச் செயலைக் கண்டு வெகுண்டு "பாபு, நீங்கள் ஏன் என்னை இப்படி அவமானப் படுத்துகிறீர்கள்? நான் உங்களைக்

தொடர்ந்து வந்து கொண்டிருக்கையில் ஏன் என்னை இந்த வேலையைச் செய்யும்படி சொல்லி இருக்கக்கூடாது?'' என்று கேட்டார். உடனே உத்தமர் தமது வழக்கமான புன்சிரிப்புடன் "நான் இத்தகைய சுத்தப்படுத்தும் பணிகள் செய்வதின் மூலம் எவ்வளவு இன்பம் அடைகிறேன் என்று நீ அறியமாட்டாய்; இத்தகைய வேலைகளைச் செய்யும்படி பிறரைக் கட்டளையிடுவதைவிட நானே விரைவில் செய்வது எளிதல்லவா? மேலும் இத்தகைய வேலை செய்வது இகழ்ச்சியானதல்ல என்றும், அது ஒரு தூய கடமை என்றும் இக் கிராமவாசிகள் இப்போது நன்கு உணர்ந்துக் கொள்வார்கள் அல்லவா?'' என்று விடை இறுத்தாராம். எத்தகைய பெருந்தன்மை! எத்துணை அடக்கம்!!

## 5. மைகல் ஆங்கிலோ :

மைகல் ஆங்கிலோ என்பவர் உலகப் புகழ்பெற்ற இத்தாலி நாட்டுச் சிற்பி. ஒரு நாள் சிற்பி தமது சிற்பக்கூடத்தில் ஆழ்ந்த கவனத்துடன் வேலை செய்து கொண்டிருக்கையில் அவருடைய நண்பர் ஒருவர் அங்கு வந்தார். ஆங்கிலோ அழகிய சிலை ஒன்றை முடிக்கும் தருவாயில் இருந்தார். நண்பர் அந்த அரிய சிலையை பார்த்துவிட்டு சிலநாட்கள் கழித்துத் திரும்பவும் வருவதாகச் சொல்லிச் சென்றார். சில வாரங்களுக்குப் பின்பு நண்பர் கலைக்கூடத்தில் தோன்றினர். சிற்பி அதே சிலையைச் செம்மைப்படுத்திக்கொண்டிருந்தார். நண்பர் சிற்பியை நோக்கி "நான் அன்று பார்த்த சிலைக்கும், இன்று பார்க்கும் உருவத்திறகும் வேறுபாடே இல்லை; அப்படியே காட்சியளிக்கிறதே; நீர் அதன் பின்பு சிலையைத் தொடவேயில்லைபோலும்!'' என்றார். அதற்குச் சிற்பி, "நண்பரே நீர் நினைப்பதும் சொல்வதும் தவறு. அன்றுமுதல் இன்று வரை நான் ஓயாது சிலையைத் திருத்தி வந்திருக்கிறேன். அன்று முதலாகச் சிலையின் கன்னத்தைப் பாடுபட்டு சீர்செய்தேன்; கண்குழியை ஆழமாக்கினேன்; கண் புருவத்தை மாற்றியமைத்தேன்; உதடுகட்குப் புதிய கோடுகள் அமைத்தேன்'' என்று கூறலானர். "ஆமாம், ஆனல் இவை எல்லாம் மிக அற்பமான சீர்திருத்தங்கள் தானே!'' என்று கேட்டார் நண்பர். "ஆம், இவை அற்பமான காரியங்கள்தான்; ஆனல் இந்த அற்பமான சீர்திருத்தங்களே எனது சிலையைப் பரிபூரணப்படுத்தி எனது திறமைக்கும் புகழுக்கும் சாட்சி பகர்கின்றன என்பதை நீர் மறந்துவிட்டீர்'' என்று உடன் மொழிந்தார் மைகல் ஆங்கிலோ. ஆம்! அவர் தம் அரியமொழியில் தவறென்ன இருக்கிறது? அண்ணல் யானை அணிதேர்ப் புரவி மன்னருடன் இருக்க மகத்தான இடம் தரும் மாபெரும் ஆலமரம் கிளைத்தெழுவது சின்னஞ் சிறியதோர் விதையிலிருந்துதானே? ★

# மயக்கமா? தயக்கமா?

ஆசிரியர் : தி. ரா. செல்வராசன்
தனலட்சுமி பாடசாலை, சென்னை.

அன்பு நண்ப,

**வ**ணக்கம். நலம். நலமறிய அவா. உன் கடிதம் கிடைக்கப் பெற்று மகிழ்ந்தேன். கோடை விடுமுறையில் பள்ளி ஆசிரியர்களுடன் மாமல்லபுரத்திற்கு இன்பச் செலவு சென்றிருந்ததைப் பற்றி நீ எழுதியதைப் படித்தபோது அதை உடனே காணவேண்டும் என்ற பேரார்வம் அடைந்தேன். அருமைத் தங்கை மலர்விழிக்குத் திருமணப் பேச்சு நடப்பதை அறிந்து உவகையடைந்தேன். ஆனால் நீ தமிழைப்பற்றி எழுதிய பொன் மொழிகளைப் படித்த போது புதுமை கண்டேன்; புத்துணர்ச்சி பெற்றேன்; புத்தின்பம் நுகர்ந்தேன். "தமிழர்களுக்கு உணர்ச்சி மட்டும் இருந்து பயனில்லை; ஊக்கம் வேண்டும்; செய்து முடிக்கும் முயற்சி வேண்டும்" என்று எழுதிய உன் பொன்னுரை வாழ்க! வெல்க!!

"காதலையும் கடவுளையும் பாடத்தான் கன்னித் தமிழ் பயன்படும். கலைகளை விளக்க—கற்பிக்கப் பயன் படாது" என்று கூவம் நதிக்கரையில் இருந்து கொண்டு தேம்ஸ் நதிக்கரையில் வாழ்வதாகக் கனவு காணும் சில மேதைகள் உளறுகின்றனர்.

"ஏன் இந்த அவசரம்? எங்களுக்குத் தெரியாதா? ஏற்ற காலம் வந்தால் தமிழ் ஆட்சி மொழியாகி விடுகிறது" என்று பரந்த மனப்பான்மை கொண்ட அரசியலார் பேசுகின்றனர்.

"நாம் ஓர் இடைக் காலத்தில் வாழ்கிறோம். இந்தி மொழி ஆக்கம் பெற்று வரும் நேரம். ஆங்கிலத்தின் சிறப்புக் குறைந்து வரும் காலம். சமயத் துறையில் வடமொழியின் பெருமை தேய்ந்து வரும் வேளை. எனவே விழிப்பு வேண்டும். இல்லையேல் வீழ்ச்சித் திண்ணம்." நீ எழுதிய இத்தகைய சீரிய நற்கருத்துக்களைப் பல முறை படித்து மகிழ்ந்தேன். பள்ளி நண்பர்களுக்குப் படித்துக் காண்பித்தேன்; கேட்டு மகிழ்ந்தார்கள்; மனமார உன் தமிழ் ஆர்வத்தைப் போற்றிப் பாராட்டினார்கள்.

"உங்கள் நண்பர் எந்தக் கட்சி? அவர் பெயரென்ன?" என்று ஏதோ ஓர் உண்மையைக் கண்டு தெளிந்தவர் போலக் கேட்டார், ஓர் ஆசிரியர்.

"ஆள் யாராய் இருந்தால் நமக்கென்ன? அவரது கருத்துத்

தானே நமக்கு வேண்டும்" என்றேன்.

"மிஸ்டர் பண்டிதர்! இதெல்லாம் உங்களுக்குத்தான் தேவை. இவர்களுக்கு ஏன் இந்தத் தொல்லை? என்றார் மற்ற ஆசிரியர் நண்பர்களைச் சுட்டிக் காட்டி.

"பிறந்த நாட்டைப் பற்றியும் பேசும் மொழியைப் பற்றியும் ஆசிரியர்கள் பேசித் தெளியக் கூடாதா? ஆக்க வழியில் ஊக்கம் செலுத்தக் கூடாதா?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"நமக்கு ஏன் இந்த வேண்டாத வேதனை" என்று கூறிக் கொண்டே அவர் அவ்விடம் விட்டகன்றார்.

நண்பா, ஆசிரியர்களைக் குறை கூறுகின்றேன் என்று தவறாக எண்ணிவிடாதே. நானும் ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியன்; ஆசிரியர்களின் சிறப்பிலும் சிறுமையிலும் எனக்கும் பங்கு உண்டு. இன்றைய ஆசிரிய உலகம் விழிப்புணர்ச்சிபெற்றுள்ளது. சினிமாக்களிலும் நாடகங்களிலும் காட்டப்படுகின்ற கேலியும் கிண்டலும் நிறைந்த ஆசிரியர்கள் மடிந்து விட்டனர்; அந்த உலகம் மறைந்து விட்டது. உணர்ச்சி மிக்க நல்ல இளைஞர்களே இன்றைய ஆசிரிய உலகில் காணப்படுகின்றனர். தாய் நாட்டுப் பற்றும் தாய் மொழிப் பற்றும் தன்னினப் பற்றும் ஆசிரிய உலகில் இப்போது அரும்பியுள்ளது; இன்னும் மலரவில்லை; மணம் கமழவில்லை. தமிழ் உணர்ச்சியும் தமிழ்ப்பற்றும் கொண்ட ஆசிரியர்கள் சிலர்தான் காணப்படுகின்றனர். இதை நீ மறுப்பாய் என்பதை நான் அறிவேன். ஆயினும் பலருடன் பழகிய அனுபவத்தால்தான் இதை எழுதுகின்றேன்.

நண்பா, ஒன்று கூறுகின்றேன் கேள்! தமிழ் அறிவு பெற்ற ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள் ஆனால் தமிழ் அறிவு பெற்றிருந்தும் அவர்கள் இன்றைக்குத் தேவையான தமிழ் உணர்ச்சி கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் எது என்று ஆராய வேண்டும். நோயாளியைப் பழிப்பதாலும் நோயை வெறுப்பதாலும் நோய் நீங்கிவிடாது. நோயின் அடிப்படையை ஆராய வேண்டும். அதைப் போக்க வழி காண வேண்டும்.

நீயும் நானும் திருமண வாயிலில் நுழைந்து இல்லறக் கோட்டைக்குள் செல்லாமல் வெளியே உலவுகிறோம். கிடைக்கும் வருவாயை வீட்டில் கொடுத்து விட்டுக் கவலையற்று நம்மால் திரிய முடிகிறது. இதனால் நமக்கு வீட்டுக்கவலை கிடையாது. ஆதலால் நாட்டைப்பற்றி நினைக்க முடிகிறது. ஆனால் பெரும்பாலான ஆசிரியர்களுக்குக் குடும்பம் நடத்தும் பொறுப்பு உண்டு. ஆசிரியர்களுக்குப் பொருட்செல்வம் குறைவாக இருந்தாலும் அறிவுச்செல்வத்தைப்போல் ஏவ மக்கட்செல்வமும் அதிகம் உண்டு. வருகின்ற வருவாயோ மிகக்

குறைவு. வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளும் தேவைகளும் மிகப்பல. தனக்காக உண்டு, பிறர் மதிக்க உடுத்து நாகரிகமாக வாழ முயல்கின்ற ஆசிரியர், வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்கி விடுகின்றனர். நம்மைப் போல இளம் வயதில் மக்கள், மொழி, நாடு, சமுதாயம் இவைகளைப் பற்றிய முழங்கிய வீரர்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்கிய பிறகு ஊமையாகி விடுகின்றனர். கவலைகள் குரல் வளையை நெரிக்கும் போது அவர்களால் என்ன செய்ய முடியும்? இதைப் படிக்கும் போது ஒரு நிமிடம் கண்ணை மூடிக்கொண்டு, அத்தகைய சூழலில் நாம் இருந்தால் என்ன செய்வோம் என்று கற்பனை செய்து பார், நண்பா, அப்போது தெரியும் அவர்களது இரங்கத் தக்க நிலை.

மாணவனுடைய கையெழுத்துச் செம்மையுற இரட்டைக் கோட்டில் எழுதச் சொல்கிறோம். தவறான எழுத்து அமைப்புக்களை சிவப்பு மையால் அல்லது பென்சிலால் அடித்துத் திருத்துகிறோம். அதைக்கண்ட மாணவர்கள் திருத்தி எழுத முயல்கிறார்கள். சமுதாயத்தைத் திருத்தி அமைக்கும் பொறுப்பிலுள்ள ஆசிரியர்களிடம் இன்று திருத்தும் கருவி இல்லை. பொருட்கவலையால் கழுத்து நெரிக்கப் பட்டுள்ள ஆசிரியர்களின் குரலை மக்களால் கேட்க முடியவில்லை; திருந்த முடியவில்லை.

ஆனால் நாடு, மொழி, மக்கள் ஆகியவைகளைப்பற்றி எண்ணிப் பார்க்கும் கடமை, இன்றைய ஆசிரியர் உலகில் இளைஞர்களிடம் உள்ளது.

கல்லூரிகளில் தமிழ் மொழியே கற்பிக்கும் மொழியாக அமையப் போகிறது. இடையில் இருந்த தடைகள் எல்லாம் நீங்கி விட்டன. பொருள்வசதியின்மையால் கல்லூரிப்படியில் ஏற முடியவில்லையே என்று கலங்கிய நமக்கு நற்காலம் பிறந்து விட்டது. கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் மொழியாக அமைந்தவுடன் தனியாகப் படித்துக் கல்லூரிப்பட்டத்தைப் பெறும் நல்ல பேற்றினை நாம் பெறலாம்.

"கற்பிக்கும் மொழியாக தமிழ் அமைந்தவுடன் தமிழில் கலைகள் பெருகும். தமிழ் இளைஞர்கள் தமிழில் எண்ணி, சிந்தித்து நிலைத்த தமிழறிவு பெறுவார்கள். நல்ல தமிழ்ச் சொற்கள் நாட்டிலே கமழும்; மக்கள் நாவிலே தவழும்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டிருந்தாய். இதைப் படித்த போது என் உள்ளத்தில் மின்னல் போல் ஓர் எண்ணம் தோன்றியது.

ஆரம்பப்பள்ளிகளில் தமிழே பாடங்கற்பிக்கும் மொழியாகப் பல்லாண்டுகள் இருந்து வருகின்றது. இந்தியா உரிமை பெற்ற பிறகு ஆரம்பப்பள்ளிகளிலிருந்து ஆங்கிலப் பாடம் அறவே நீக்கப்பட்டது. ஆனால் அதன் ஆட்சி இன்னும் அகல வில்லை. இதை எண்ணும் போது உள்ளம் நோகிறது. வீட்டைப் பெருக்கவும், சோறு சமைக்கவும் துணிதுவைக்

நவும் பயன் படும் வேலைக்காரி யைப் போல பாடங்களைக் கற்பிக் கமட்டும் தமிழ் பயன் படுகிறது. பணப்பெட்டி சாவியை வைத் துள்ள வீட்டுக்காரியைப் போல ஆங்கிலம் அரசாளுகிறது.

நண்பா, கிராமங்களில் உள்ள பள்ளிகளை விட நகரங்களில் தான் இந்தக் 'கொடுமை'யைக் காணலாம். சிலபள்ளிகளில் பெயர்ப் பலகைகள் ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ளன. ஆங் கிலம் தெரியாத இளம் பிள்ளைகள் அந்தப் பலகையால் அடையும் நன்மை என்ன? பாமரமக்களுக் கும் பள்ளிப் பிள்ளைகளுக்கும் பயன் பட வேண்டிய பள்ளிப்பெ யர்ப்பலகை ஆங்கிலத்தில் மட்டும் எழுதியிருப்பது பேதமையாகும். தமிழில் எழுதினால் பள்ளியின் மதிப்பும் கல்வியின் தரமும் குறைந்து விடுமா? இதை எல் லாம் நாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

'பள்ளி நிர்வாகிகளும் ஆட்சிக் குழுவினரும் தான் பள்ளிகளில் ஆங்கிலம் அதிகமாகக்கையாளப் படுவதற்குக் காரணமாவார்கள். இதில் ஆசிரியர் தலையிட்டு என்ன செய்யமுடியும்' என்று நீ கேட்க லாம். இன்று ஆரம்பப் பள்ளிகளை நடத்து வோருக்குத் தமிழ் பகை யானது அன்று. அவர்களுக்கு எடுத்துக்கூறி, அந்த வேலையைப் பொறுப்புடன் செய்து முடிக்கும் நல்லாசிரியர்கள் தான் அவர் களுக்குத் தேவை.

விடு முறையில் அங்கு வந் திருந்த போது, உன் பள்ளி பெயர்ப் பலகையில் ஆங்கிலத் தில் மட்டும் எழுதியிருந்ததைப் பார்த்தேன். நீ அமைதியாக, பலகையைத் தமிழில் எழுது மாறு உன் மதிப்பிற்குரிய பள்ளிப் பொறுப்பாளரிடம் சொல்லிப்பார்! அதற்கு அவர் இணங்குவா ரென்று நம்புகின் றேன்

நண்ப, மற்றொன்றை மறந்து விட்டேன்! உன் பள்ளி தகவல் பலகையும் நெடுங்காலத்திற்கு முன் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, தேடிக்கண்டுபிடிக்கும் வகையில் மூலையில் மாட்டப் பட்டிருக் கிறது இதையும் தமிழில் எழுது மாறு பணிவுடன் அவரை வேண்டிக் கொள்! உன் வேண்டு கோள் வெற்றி பெறும்.

ஆனால் ஒன்று மட்டும் நினை வில் வைத்துக்கொள். உன்னுடன் இருக்கும் ஆசிரியர்களைக் கலந்து பேசாமல் எதையும் வீம்பாகச் செய்யாதே! பள்ளிக்கூடம் ஒரு குடும்பம். அதில் நீ ஓர் உறுப் பினன் என்பதை மறவாதே!

பள்ளி திறந்த நாளில் புதிய மாணவர்கள் சேர்ந்துள்ள வகுப் பிற்குச் சென்றேன். வழக்கம் போல பெயர்ப் பதிவு செய்ய மாணவர் பெயரைப் படித்தேன். 'பிரசண்ட் சார்', 'ஆஜர் சார்' என்று மாணவர்கள் கத்த ஆரம் பித்தனர். தமிழில் 'உள்ளேன் ஐயா!' என்று சொல்லுமாறு அறிவுறுத்தினேன். அன்று பிள்ளைகள் சிரித்தார்கள். தொடர்ந்து அதையே சொல்லு

மாறு வற்புறுத்தி வந்தேன். இப்போது பள்ளிப்பிள்ளைகள் அனைவரும் "உள்ளேன் ஐயா" அல்லது "உள்ளேன் அம்மா" என்று மகிழ்வுடன் சொல்கிருர்கள்.

முதல் வகுப்பிலிருந்து கேட்டு வந்த ஆங்கிலச் சொற்களைச் சொன்னுல் தான் மதிப்பு உண்டு என்று பிள்ளைகள் தவருக எண்ணுகின்றனர்; ஆசிரியர்களும் அவ்வாறே கருதுகின்றனர். "சார், டீச்சர்" என்று அழைப்பதற்குப் பதிலாக "அண்ணு, அக்கா" என்ற அழைத்தால் கேட்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கும். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே குடும்பப் பிணைப்பும் நிலைத்த அன்பும் ஏற்படுமல்லவா?

வகுப்புக் கரும்பலகையின் மூலையில் Roll, Present, Late, Total, என்று ஆரம்ப வகுப்புக்களில் எழுதுவது ஏன் என்று புரியவில்லை. இந்த ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக 'உரியோர், உள்ளோர், காலம் கடந்தவர், மொத்தம்' என்று நல்ல தமிழில் எழுதிஞல் என்ன கெட்டுவிடும்? வகுப்பையும் பிரிவையும் தமிழில் எழுதி மாட்டிஞல் பிள்ளைகள் படித்து மகிழமாட்டார்களா?

'ஆங்கிலத்தின் அழகே அழகு. அதன் சுருக்கமும் இனிமையும் வேறு எந்த மொழிக்குத் தான் வரும். ஆங்கிலத்தின் தனிச் சிறப்புத் தமிழுக்கு உண்டா' என்று ஒரு சிலர் கேட்கின்றனர். தமிழ்வளம் அறியாத அந்தத் தமிழ் மக்களைக் கண்டால் சிரிப்புத்தான் வருகிறது. 'குட்மார்னிங், 'ஜெ ஹிந்த், 'நமஸ்காரம்' ஆகிய சொற்களை மக்கள் பேசி வந்த போது 'வணக்கம்' என்ற தமிழ் சொல் பயன்படுத்தப் பட்ட போதும் இப்படித் தான் சொன்ஞர்கள். ஆனல் இன்று 'வணக்கம்' என்ற சொல் பொருள்வளம் பெற்று மக்கள் நாவிலே தவழ்கிறது. எல்லாவற்றிற்கும் தமிழைப் பயன் படுத்தலாம். உணர்ச்சியும் ஊக்கமும் தான் தேவை. ஆரம்பப்பள்ளி முழுவதும் தமிழே ஆட்சி செலுத்த வேண்டும். இந்த அடிப்படை அமைந்தால்தான் கல்லூரிகளிலும் தமிழ் செழித்து வாழ முடியும்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஆரம்ப வகுப்புக்களிலே கற்பிக்கும் போதே 'நாடும் மொழியும் பின்னறி தெய்வம்' என்பதையும் ஊட்ட வேண்டும்.

ஆசிரியர்களுக்கு வாழ்க்கையில் குறிக்கோளும் பிள்ளைகளிடம் அன்பும் இருக்கவேண்டும். காலம் காட்டும் கடிகாரத்தின் இரு முட்களைப் போல அவை அவசியமானவை. வெறும் புத்தக அறிவை விட, பிள்ளைகளிடம் காட்டும் அன்பே ஆசிரியர்க்குத் தொழில் வெற்றியைத் தரும்; நல்ல புகழைத்தரும். அகலமான

(அடுத்த பக்கம் பார்க்க)

# களைப்பு—ஓர் ஆராய்ச்சி

ஏ. சி. ராயப்பன், ஆசிரியர்: ஆயக்குடி.

ஆசிரியரின் தொழில் ரீதியான வெற்றியைப் பாதிக்கும் பலவற்றுள் "களைப்பும்" ஒன்று. ஆசிரியர், மாணவர் ஆகிய இரு சாராருமே களைப்பற்றவர்களாகத் தங்கள் செயலில் ஈடுபடுவது

(முன் பக்கத் தொடர்ச்சி)

கிணற்றை விட ஆழமான கிணறே கோடையிலும் வற்றாது.

இன்று சில ஆசிரியர்களிடம் காணப்படும் எல்லையில்லா ஆங்கில மோகம் அழிந்து, தமிழ்த் தாகம் பிறக்கவேண்டும். ஆரம்பப் பள்ளிகளில் எல்லாவற்றிற்கும் தமிழைப் பயன் படுத்தினால் ஆங்கில அறிவு தேய்ந்து விடும் என்ற மயக்கமா? அல்லது நம்மால் என்ன செய்ய முடியும் என்றதயக்கமா? ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை.

நீ நாள் தோறும் திருக்குறளைப் படித்து வருவதை அறிந்து பெரு மகிழ்ச்சி யடைகின்றேன். நானும் உன்னைப் பின்பற்ற முயல்கின்றேன். பிற பின்னர்.

**கடமையைச் செய்து**
**கன்னித் தமிழ் வளர்ப்போம்!**

அன்பன்,
அறவாழி.

"கற்றல்" வெற்றி பெற மிக அவசியமானதாகும்.

களைப்பு ஏற்படக் காரணமான ஏதுக்களை ஓர் ஆசிரியர் அறிந்து கொள்ளுவதன் மூலம் மாணவர்களைக் களைப்படைவதிலிருந்து காத்தும், அடைந்த களைப்பைப் போக்கியும் தனது போதனையை எளிதாக்க முடியும்.

பொதுவாக ஆசிரியர்கள் அறிந்திருக்கிற, களைப்புக்குக் காரணங்களாகிய (1) நீண்ட நேர வேலை (2) மாறுதல் அற்ற வேலை (3) குறிப்பிட்ட ஓர் உறுப்புக்கு வேலை (4) தூக்கமின்மை (5) உடல் நலமின்மை (6) காற்றோட்ட வசதி, இருப்பிட வசதி போன்றவற்றின் குறை ஆகியவை தவிர களைப்பை உண்டாக்கும் வேறு சில காரணங்கள் இருப்பதையும், இரத்தத்தில் பிராணவாயு குறைபடுவதால், டாக்ஸின்கள் (Toxins) என்ற விஷப் பொருள் அதிகமாகி அதன் காரணமாக இரத்த ஓட்டம் இயல்பாக நிகழத் தடையேற்பட்டுக் களைப்பு உண்டாவதையும் தவிர வேறு காரணங்கள் இருப்பதையும் சமீபத்திய உடல் நூல் ஆராய்ச்சிகள் வெளியிட்டுள்ளன.

களைப்பானது, அபாயகரமான அளவுக்கு அதிகமான வேலை செய்து உடலின் உறுப்புகளும் மனதும் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளுவதிலிருந்து தடுப்பதற்காகத் தனக்குத் தானே ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு பாதுகாப்பு நடவடிக்கை என்று நவீன விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். எடுத்துக்காட்டாக, அதிக உடல் உழைப்பினின்று உடலைத் தடுக்க, நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு, வியர்வை, நெஞ்சுத் துடிப்பு, குறைமூச்சு போன்ற அபாய அறிவிப்புகளை நமக்கு வெளியிடுகிறது. உடலுறுப்புகள் வேலை செய்ய மறுக்கின்றன; மனிதன் வேலைத் திறன் திடீரென கீழ் நோக்கி இறங்குகிறது.

அதிக வேலையின் காரணமாகக் களைப்பு ஏற்படுவதற்கு, தசைகள் வெளியிடும் களைப்பு நச்சு (tiredness toxin) தான் காரணம் என்று நீண்ட நாட்களாக நம்பப்பட்டு வந்தது. ஆனால் விஞ்ஞானிகள், உடலின் எரிபொருள் ஈடுபாட்டை (fuel supply) ஆராய்ந்தபோது, வியப்பிற்குரிய விதமாக, பிராண வாயு, (oxygen) இரத்தச் சர்க்கரைச் சத்து (Blood sugar) ஆகியவற்றின் சிறு சேமிப்புகளைக் கண்டார்கள். இந்த சேமிப்புகளின் அளவு குறையும்போது உடலும் மனமும் களைப்படைகின்றனவென்பதையும் அறிந்தார்கள்.

ஓய்வு பெறும் நிலையில் நமது உடலுக்குச் சாதாரணமாக ஒரு நிமிஷத்திற்கு ஏறத்தாழ கால் படி அளவு பிராணவாயு தேவைப்படுகிறது. ஆனால், நாம் ஏதாவது ஒரு வேலை செய்யத் தொடங்கிய உடனே, நமது பிராண வாயுத் தேவையும் கூடவே உயரத் தொடங்குகிறது. அந்த நிலையில் நமது பிராண வாயுத் தேவையின் அளவை நிமிஷத்திற்கு ஆறரை காலன் என மதிப்பிடலாம். இவ்வித அவசர நிலையில் நமது சுவாசப்பை, நிமிஷத்திற்கு ஒரு காலன் பிராணவாயுவைத்தான் உடலுக்குத் தயாரித்துத் தர முடியும். மீதி பிராணவாயுவை நாம் நமது இரத்தச் சிவப்பு நுண் அணுக்களில் (Red blood corpuscles) சேகரித்து வைக்கப்பட்டுள்ள சேமிப்புகளிலிருந்து கடன் பெற்றுச் சக்தியாக மாற்ற வேண்டியதாகிறது. இவ்விதமாகப் பெறுவதும் கூட நான்கு அல்லது ஐந்து காலன் அளவுதான்.

நமது பிராணவாயுச் சேமிப்பு ஒரு குறிப்பிட்ட சிறிய கால அளவுக்குத் தீவிரமான விகிதத்தில் உடலின் "சக்தி வெளியீட்டை" நிகழ்த்த உதவுகிறது. நாம் ஒரு ரயிலைப் பிடிக்கத் துரிதமாக ஓடும்போதோ, மிக வேகமான ஒரு டென்னிஸ் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் போதோ நாம் இந்தச் சேமிப்பில் சுமார் மூன்றில் ஒரு பகுதி

ணயைச் செலவழித்துவிடுகிறோம். ஆயினும், நமது உடல், மனம் ஆகியவற்றின் தொழிலின் முக்கியத் தேவைகளை ஈடுகட்டுவதற்கான இந்தச் சேமிப்பை முழுவதும் செலவழிக்கும் வரைக்கும் நாம் அனுமதிக்கப்படுவதில்லை. தாங்கக் கூடிய அளவுக்கு அதிக வேகமாக மோட்டார் வண்டி ஓடும்பொழுது அதைத் தானாகவே தடுக்க அமைக்கப்பட்டிருக்கும் கவர்னர் (Governor) என்னும் கருவி போல, நமது உடல் வேலையின் வேகத்தைக் குறைக்க எச்சரிக்கை சமிக்ஞைகளாகப் பல "உயிர்காப்பு அசௌகரியங்கள்" ஏற்படுகின்றன. தசைகள் வலிக்கின்றன; இருதயத்தைச் சுற்றிலும் சிறிது இசிவும் பிடிப்பும் (Stitch) ஏற்படுகிறது; சுவாசப் பைகள், இயல்பான முறையில் செயல்பட அனுமதி கோருகின்றன.

நிதானமான நிலையில் நமது உடலின் பிராணவாயுத் தேவையும் விநியோகமும் சமநிலையிலேயே இருக்கின்றன. ஆனால் இந்நிலையிலிருந்து சிறிது செயல் மாற்றம் ஏற்பட்டாலும் இந்தச் சமநிலையில் அதிக மாறுதல் ஏற்படுகிறது. உதாரணமாக சாதாரண நடை, இரத்தச் சர்க்கரை எரியும் தேவையை இரட்டிப்பாக்குகிறது; கடினமான உடல் வேலை, இத்தேவையை ஐந்து முதல் பதினைந்து மடங்கு அதிகமாக்கிவிடுகிறது. மூளையும் நரம்புகளும், சர்க்கரைப் பொருள், பிராணவாயு ஆகியவற்றின் இருப்புக் குறைவால் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. இரத்தத்தின் சக்திச் சேகரிப்பு முழுவதும் தீருவதற்கு வெகு முன்பதாகவே பல தற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கி விடுகின்றன. இச்செயலில், நரம்புத் துடிப்பு, மூளை, தசைநார்கள் ஆகியவை தங்கள் கடமைகளைச் செய்யப் புகும்போதே நாம் சாதாரணமான "களைப்பை" உணருகிறோம்—நம்மை நாமே அழித்துக்கொள்ளுவது தடுக்கப்படுகிறது.

மன உழைப்பு உடல் வேலையைப் பாதிப்பானேன்? மூளையின் எடை உடலின் எடையில் இரண்டு சதவீதமே; மூளை நேரடியாக எந்தவித இயக்கத்திலோ, சக்தி வெளியீட்டிலோ கடினமாக ஈடுபடுவதுமில்லை. ஆயினும் மூளைக்கு உடலின் மொத்த இரத்த ஓட்டத்தில் பதினைந்து சதவீதமும், உட்கொள்ளப்படும் பிராணவாயுவில் இருபத்து மூன்று சதவீதமும் தேவைப்படுகிறது. அதனுடைய சர்க்கரைச் செலவும் அதிகமாகவேயிருக்கிறது. இவ்வித அதிகச் செலவு மூளைக்கு ஏற்படுவதற்கான காரணம் என்னவென்பது இன்னும் நிச்சயமாகக் கண்டுபிடிக்கப்படாத புதிராகவேயிருக்கிறது. மூளை, சர்க்கரைச் சத்தையும், பிராணவாயுவின் இரசாயனச் சக்தியையும் நரம்புத் துடிப்புகளாகவும், மின்சார மூளை அலைகளாகவும் (Elec-

trical brain waves) மாற்றுகிறது என்பது மட்டுமே நமக்குத் தெரியும். தனக்கென்று யாதொரு சர்க்கரைச் சத்துச் சேமிப்போ பிராணவாயுச் சேமிப்போ இல்லாத நிலையில், மூளை, சுழலும் இரத்தத்திலிருந்தே தொடர்ச்சியாகத் தனது தேவைகளைப் பெற வேண்டியிருக்கிறது. மூளைக்கு அளிக்கப்படும் இந்த போஷாக்கு, சில நிமிஷங்கள் தடைபடினும் மூளை மயக்க நிலையடையும். குறைந்தபட்சமாக ஒரு எட்டு நிமிஷத் தடை, ஈடு செய்ய முடியாத சேதத்தை விளைவிப்பதுடன் மூளை அணுக்களின் மரணத்திற்கும் போதுமானதாயிருக்கிறது.

மரணமும் வாழ்வும் இவ்வளவு துல்லியமாகத் தராசுத் தட்டுகளில் தொங்கிக்கொண்டிருக்கும் நிலையில், மூளை, தனது சர்க்கரை, பிராணவாயுத் தேவைகளில் ஏற்படும் மிகச் சிறிய அளவு குறைபாட்டைப் பற்றியும் தீவிர கண்காணிப்புடன் இருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவ்வித நிலை ஏற்பட்ட உடனே அது "உடல் களைப்பு" (Physical fatigue) என்ற அபாயச் சங்கை ஊதி, பிற உறுப்புக்களின் வேலையைக் குறைத்து, அவற்றிற்குச் செல்லும் இரத்தத்தின் அளவைக் குறைத்துத் தன் பாதையில் திருப்பிக் கொள்ளுவதன் மூலம் அபாய நிலையைச் சமாளித்துக் கொள்ளுகிறது. இவ்விதமாக மன உழைப்பு, மூளையின் வேலை, உடற்களைப்பு ஆகியவை ஒன்றோடொன்று பிணைபட்டிருக்கின்றன.

மனவெழுச்சிகளும் களைப்பை உண்டாக்கக்கூடும். ஆதி மனிதன், தன் எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் செயலிலேயே தனது உடல் சக்தியின் பெரும் அளவைச் செலவழிக்க வேண்டியவனாகயிருந்தான். இவ்வேலையில், அவனது சக்திச் சேமிப்புகளைத் (Energy reserves) திருப்பிவிட அவனது அட்ரீனல் சுரப்பிகள் (Adrenal glands) உதவி செய்தன. இவ்வித நிலைகளை மேற்கொள்ள அவனது மனதையும் உடலுறுப்புகளையும் முடுக்கிவிடும் சக்தியாகவே மனவெழுச்சிகளும் ஏற்பட்டன; பயன்பட்டன. கோபம், பயம் போன்ற மனவெழுச்சிகள் தோன்றும்போது இச்சுரப்பிகளினின்றும் ஊறிய சத்துப் பொருள் (adrenalin) இரத்தத்துடன் கலந்து அதன்மூலம் அவனது இருதயம் வழக்கத்திற்கு அதிகமாகத் துடிக்கவும், மூச்சிழுப்பின் விகிதம் உயரவும் செய்து, அதிகமாகப் பிராணவாயு உட்கொள்ளப்பட்டு, உறுப்புகளுக்கு அதிக இரத்தமும் சக்தியும் ஊட்டப்பட்டன. சேமிப்புகளிலிருந்து சர்க்கரைப் பொருள் தேவையான பகுதிகளுக்குத் திருப்பிவிடப்பட்டது. அபாய நிலை ஓய்ந்தபின், வேலைகள் முற்றுப் பெற்றபின், "அட்ரீனலின்"

பார்வதும் நிற்க, சகலமும் சகஜ நிலை அடைந்தன. இந்தப் "பாது காப்புரிமை"யை நாம் ஒவ்வொருவரும் அனுபவித்துத் தான் வருகிறோம். குறுகிய கால அவசர நிலைமைகளை மேற் கொள்ள நாம் ஒவ்வொருவரும் இம்முறையின் மூலமாகத்தான் சக்தி பெறுகிறோம். ஆயினும், ஆதி மனிதனைப் போல் அல்லாது, உடல் பல ஈடுபாட்டினால் மாத்திரம் தீர்த்துவிட முடியாத பல பிரச்னைகளை நாம் எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. நமது பொருளாதார நிலைபற்றிய பயத்தின் காரணமாக நமது தொழில்மீதுள்ள (நமது என்ற வுடன், ஆசிரியத் தொழிலைத் தான் வெறுப்புக்குரியதாகக் குறிப்பிடுகிறேன் என்று எண்ணிவிடாதீர்கள். எந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களா யினும் சரி, வெறுப்புற்ற நிலையில் உள்ளவர்களை மாத்திரமே குறிப்பிடுகிறேன்) வெறுப்பைப் "பல்லைக் கடித்துக்கொண்டு" அடக்கிக்கொள்ள வேண்டியதா கிறது; அதை விட்டுத் தொலைக்க முடிவதில்லை. மனைவியின் தொண தொணப்பைச் சகித்துக்கொள் ளுவது மாத்திரமின்றி, அவள் "படைக்கும்" பத்தியச் சாப் பாட்டைப்பற்றி புகழ்ந்து பேசும் நிலையிலும் சில சமயங்களில் சிக் கிக்கொள்ளுகிறோம். (அடிசிற் கினியாளே...என்பதற்கு இலக் கணமாக உங்கள் தலைவி அமைந் திருப்பாளாயின் நீங்கள் மட்டும் இக்கூற்றுக்கு விதிவிலக்கு; பாக் கியசாலி, அபூர்வப் பேர்வழிகள் ஜாபிதாவில் இடம் பெறவேண் டியவர்கள் என்ற நற்சாட்சியை உங்கள் மீது சூட்டுகிறேன்) நமது அண்டை வீட்டுக்காரரோ பிறரோ நமக்கு விளைவிக்கும் துன்பங்கள் நம்மை அலட்ட லாம். ஆனால் நம்மில் வெகு சிலரே தங்கள் உடல்பலத்தை ஈடுபடுத்தி இவ்வித பிரச்னைகளுக் குத் தீர்வு காணத் துணிவர். நாக ரீக சமுதாயத்தில் மனிதன் தனது மனவெழுச்சிகளை வெளிப்படையாகப் பலாத்கார முறைகளின் மூலம் வெளியிட இடமில்லை. ஆயினும், இவ்வித ஒன்றிற்கொன்று எதிரிடையான மனவெழுச்சிகளின் போராட் டம் மனதினுள் தொடர்ந்து நடப்பதைத் தடுக்க அந்நிலையில் நம்மால் முடியாது. இவ்வித மான அசாதாரண நெருக்கடி நிலைமைகளில், சக்திகளை மடை மாற்றும் உள்ளமைப்புகள் (interior mechanism) வெகு வாகப் பாதிக்கப்பட்டுச் சேத மடைகின்றன. இதன் மூலம் தீராத "நாட்பட்ட களைப்பு" ஏற்படுவதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

நாம் நோய்வாய்ப்பட்டிருக் கும்போதும், இந்தக் "களைப்பு" உபாயத்தின் மூலம், நமது உடல் வேலைகள் தடை செய்யப்பட்டு நோயை எதிர்க்கும் பணியில் நமது சக்திகள் செயல்படுகின் றன. ஆகவே, களைப்பு பொது வாக நோயின் அறிகுறியாகக் கொள்ளப்படுகிறது.

உணவுப் பழக்கங்களில் மாறுதல்கள் செய்வதன் மூலம் களைப்பிற்குப் பரிகாரம் காணமுடியுமா வென்று, யேல் பல்கலைக் கழகத்தின் (Yale University) உடற்கூறுப் பேராசிரியர்களான ஹவார்ட் ஹகார்ட், லியோன் கிரீன்பர்க் (Howard Haggard and Leon Greenburg) ஆகிய இருவரும் ஆராய்ந்தார்கள். ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு உட்கொண்ட தொழிலாளர்களைக் கவனித்தபோது, ஒவ்வொரு வேளை உணவுக்குப் பின்னும், ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, அவர்களுடைய இரத்தத்தின் சர்க்கரைச் சத்தும், தசைகளின் வேலைத்திறனும் தீவிரமாக உயருவதையும், மிக விரைவில் சாதாரண நிலைக்குக் குறைந்துவிடுவதையும் கண்டார்கள். ஆனால், அதே தொழிலாளர்களுக்கு நான்கு, ஐந்து வேளை உணவுகள் அளித்து ஆராய்ந்த பிறகு மேற்கண்ட சத்துத் தன்மையும் உயர்ந்த அளவில் தொடர்ந்த நிலையில் நீடித்து வெளிப்படுவதைக் கண்டார்கள். களைப்பும் வெகுவாகத் தவிர்க்கப்பட்டது. தவிரவும், சிலருடைய ஜீரண உறுப்புகள் கொழுப்பைத்தாமதமாக எரிக்கின்றன; சிலர் உணவில் அதிக சர்க்கரைப் பொருட்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். இவைகளினால் எல்லாம் அவர்கள் உடலின் மாவுச் சர்க்கரைச் சத்துக்களின் (Carbohydrates) தேவை புறக்கணிக்கப்படுகிறது. இயல்பான தேவையான 2400 - 3000 கலோரி வெப்பத்திற்குப் பதிலாக 800 அல்லது 1000 கலோரி வெப்பம்தான் கிடைக்கிறது. இதனால் உடற்சக்தியை உணவுச்சத்துப் பற்றுக்குறையை ஈடுசெய்யச் செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது; மன உழைப்பு பாதிக்கப்படுகிறது; களைப்பு ஏற்படுகிறது. இவ்விதமாக உணவும் "களைப்பு"க்குத் தன் பங்கைச் செலுத்திவிடுகிறது. நல்ல வைத்தியருடைய உதவியின் மூலம் மெதுவாகவும் அளவாகவும் சக்தியாக மாறக்கூடிய உணவுத் திட்டத்தை வகுப்பதன் மூலம் இதற்கு நிவர்த்தி காணலாம்.

உடற்பயிற்சிக் குறைவு களைப்பிற்குக் காரணமாக முடியுமா? தீவிரமான விளையாட்டுக்குப்பின் நம் அவயவங்கள் ஓய்ந்துபோவதைக் காணும்போது, களைப்பு ஏற்படுவதற்கான குற்றச்சாட்டைச் சாதாரணமாக கடினமான வேலையின் மீதும் விளையாட்டின் மீதும் தான் சுமத்துகிறோம். ஆனால் சமீபத்திய ஆராய்ச்சிகளோ சீரான உடற்பயிற்சியில்லாத குறையே களைப்பிற்குக் காரணமென அறிவிக்கின்றன.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் (Harward University) பேராசிரியர் ராஸ் மக்ஃபர்லாண்ட் (Ross McFarland) என்பவர், பயிற்சிபெற்ற விளையாட்டுக்காரர்களையும், இருப்பிலேயே இருந்து செயலாற்றும் மாணவர்களையும் உட்படுத்திச் சில ஆராய்ச்சிகள் செய்தார். அவர்களுக்குத் தனிப்பட்ட சில உடற்பயிற்சிகளை

அளித்து, அவர்களது நாடித் துடிப்பை ஒத்திட்டுப் பார்த்தார். பயிற்சி பெற்ற ஆட்டக்காரர் களின் இதயங்கள் குறைந்த எண்ணிக்கையான துடிப்புகளில் (beats) அதிகமான அளவு இரத்தத்தை இறைப்பதைக் கண் டார். அதே கலாசாலையில் நடாத்திய வேறொரு ஆராய்ச்சி யின் மூலம் பேராசிரியர் டி. பி. டில் (D. B. Dill) என்பவர், வழக்கமாக உடற் பயிற்சி செய்து வருகிறவர் களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு வேலைசெய்ய மற்றவர்களை விடக் குறைந்த அளவு பிராணவாயு போதுமானதாக யிருப்பதைக் கண்டறிந்தார். சீரான உடற் பயிற்சிகள், சுவாசப் பைகளின் திறனையும் கொள் அளவையும் (Capacity) அதிகப்படுத்துகிற தென்பதையும் நிரூபித்தார்.

ஆனால் பிற சில ஆய்வுகளோ இருப்பிலேயே இருக்கும் மாண வர்களைத் தீவிரமான விளையாட்டு களில் ஈடுபடுத்தும்போது பெரும் அளவில் உட்சேதம் ஏற்படு வதாக நிரூபித்துள்ளன. இப் பரிசோதனைகளின் மூலம், அவர் களது இரத்தச் சிவப்பு அணுக் களில் 12 முதல் 30 சதவீதம் அழிந்து விடுவதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இந்நிலை, அவர் களது இரத்தம் பிராண வாயுவை மூளைக்கும் தசைகளுக்கும் கொண்டு செல்லும் சக்தியைப் பெரிதும் குறைக்கிறது. இதன் காரணமாகவே வாரம் முழுவ தும் இருப்பில் இருந்து தொழில் புரியும் ஒருவர் வார விடுமுறை யின்போது தீவிரமான விளை யாட்டுகளில் ஈடுபட்டபின் மிக வும் களைத்தவராகக் காணப்படு கிறார்.

தூக்கத்திலும் களைப்பா? நாம் தூங்கும்போது சக்திகளைச் செல விடும் நம் அவயவங்கள் அனைத் தும் ஓய்வு பெறுவதால் நமது உடலின் சக்திச் சேகரிப்பு அதி கரிக்கிறதென்பதுவும், அதன் பயனாக ஏழு அல்லது எட்டு மணி நேரத் தூக்கத்திற்குப் பின் நாம் பெரிதும் ஊட்டம் பெற்ற நிலையில் எழுகிறோம் என்பதுவும் உண்மையே. ஆயினும், இந்த நித்திரையின் போதும்கூட நமது உடலுக்கு எதிர்பாராத சக்திச் செலவுகள் ஏற்படாமலில்லை. குளிர்ந்த அறையில் தூங்கும் போது நமது போர்வை நழுவி விடலாம். இங்கு பாதிக்கப்படும் உடலின் வெப்பநிலையைத் தகுந்த அளவில் நிறுத்தும் வேலையில் சக்தியைச்செலவழிக்க வேண்டி ஏற்படுகிறது. இதற்கு மாறாக அதிக வெப்பமான அறையிலோ அதிகரிக்கும் உட லின் சூட்டைத் தணித்துச் சம நிலைப்படுத்தும் வேலையில் சக்தி செலவாகிறது. தூக்கத்திலாவது சுகம் காணலாம் என்றால் அங் கும் எதிர்ப்பு! வியயம்!! போராட் டம்!!!

களைப்புக்கு மாற்று மருந்தாக காப்பி, தேயிலை, புகையிலை போன்றவற்றையும், மதுவையும் துணைக்கு அழைக்கிறார்கள்பலர். அதிசயிக்கத் தக்கவிதமாகப்

பலன் கிட்டுவதாயும் கூறிக் கொள்ளுகிறார்கள். ஆனால் இவற்றைப் பற்றி பொதுவாக ஒன்று கூறி விடலாம். இவை அனேத்தும் களேப்பைச் சிறிது நேரத்திற்கு "ஒத்தி" வைக்கின்றன வேயன்றி அதைப் போக்குவதற்குச் சக்தியற்றவையாக யிருக்கின்றன. பிரித்துவைக்கப்பட்ட களேப்பு மீண்டும் பிடிக்கும் போதே, சாதாரணமான நிலையில் அளிக்கும் சோர்வை விட அதிகமான சோர்வைஅளிக்கும். இவற்றைஉபயோகியாத நிலேயில் ஏற்படும் களேப்பை ஈடு செய்யத் தேவைப்படும் ஓய்வைவிட இவற்றின் உதவிக்குப் பின்உண்டாகும் களேப்பைச் சமாளிக்க அதிக ஓய்வுதேவையாகயிருக்கும். மனிதர்களது "உயிரைக் குடிக்கும் விகிதத்திற்கு வட்டிக்குக் கொடுக்கும் நெஞ்சமற்ற உத்தமர்களேப் போல லாகிரி வஸ்துக்களும் பிற "மருந்து"களும் ஒரே விதமான தீமையைப் போட்டி போட்டுக்கொண்டு உடலினுள் புகுத்துகின்றன. அப்பழக்கங்கள் தீராததும், பின்பு விருப்பப் பட்டபோது மாற்ற முடியாததுமான ஒரு நோயாகவே வளர்ந்து விடுகின்றன; பசியைக் கெடுப்பதுடன், ஜீரணக் கருவிகளேயும் செயலிழக்கச் செய்து, நுட்பமான உணர்ச்சிக் கருவிகளேயும் பாதிக்கின்றன. லாகிரி வஸ்துக்களின் கைங்கரியம்தான் இவையென்றால், "களேப்பு போக்கி" மருந்துகளோ இன்னும் ஒரு படி மேலே சென்று, அளவுக்கு அதிகமாக உட்கொள்ளப் படின் கிறு கிறுப்பு, தலேவலி, தூக்கமின்மை என்று உயர்ந்து, சில வேளைகளில் உயிரிழப்பையும் விளேவிக்கின்றன. இங்கிலேயில், தேர்ச்சியடைந்த ஒரு வைத்தியரின் யோசனையின் பேரில் அல்லாது இவை அபாயகரமானவையாகவேஆகின்றன. மதுவைத் தொழுகைக் கொள்ளுகிறவர்கள் ஓரளவு களேப்பு உணர்ச்சியை "ஒடுக்கு"வதன் மூலம் தற்காலிக வெற்றி காணுகிறார்கள். மதுவை, செயலூக்கி (Stimulant) என்பதைவிட, ஒடுக்கி (Depressant) என்பதே சாலப் பொருத்தமானதாகும். தங்கள் உடலுக்கு வேண்டிய வெப்பத் தேவையில் (Colorie–supply) பெரும் பங்கை மதுவிலிருந்து இவர்கள் பெற்று விடுவதால், மற்ற சத்துக்கள் இவர்களுக்குக் குறைபடுகிறது. இயல்பாகவே இரத்தச் சர்க்கரை குறைவடைந்து விடுகிறது. ஜீவ சத்துக் குறைபட்டுள்ள நரம்புகளும் தசைகளும் வலிக்கின்றன; மனதின் "உணரும் தன்மை"யை இவர்கள் அமிழ்த்துவதன் மூலம் வலி, களேப்பு போன்றவற்றைத் தற்காலிகமாகத் திரையிட்டு மறைத்து விடுகிறார்கள். ஆனால் அதன் பின்னணியில் இவர்களே வரவேற்க விருக்கும் உடற்சேதங்கள் தவிர்க்க முடியாதன; வெல்ல முடியாதன. பிறர் களேப்பின் நுழைவாயிலில் கால்வைக்கு முன்பே இவர்கள் களேப்பின் வெளி எல்லேக்கு வந்துவிடுகிறார்கள்.

பீடி, சிகரெட் ஆகியவற்றிலுள்ள "நிகடின்" (Nicotine) என்னும் சத்து, துடிப்பு வேகத்தை அதிகப் படுத்தி இரத்த ஓட்டத்தையும் துரிதப் படுத்துகிறது. இதன் மூலம் மூளைக்கு அதிக இரத்தம் செலுத்தப் பட்டுக் களைப்பு தவிர்க்கப் படுகிறது. ஆனால், புகையில், இரத்தச்சிவப்பு அணுக்களினின்று பிராணவாயுவைப் பிரிக்கும் கார்பன் மானைக்ஸைட் (Carbon monoxide) என்ற நச்சுப் பொருளும் இருக்கிறது. தொடர்ந்த புகைக் குடியர், தான் நிகடின் மூலம் பெறும் விடுதலைக்குப் பதிலாக, தீர்க்க முடியாத அளவுக்கு தன் உடலில் கார்பன் மானுக்ஸைட் இருப்பைச் சேமித்துக் கொள்ளும் அபாயத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்.

மருந்து மதுசாரங்களின் மூலமாகக் களைப்பைப் போக்கும் உபாயம் உபயோகமானதாயிருக்கலாம். ஆனால் புத்தி பூர்வமான யோசனைக்குப்பின், தவிர்க்க முடியாத நிலைகளிலேயே இவற்றை நாடலாம்.

இயற்கையின் சிறந்த முறையாகிய தூக்கம், ஓய்வு ஆகியவற்றின் இடத்தை ஈடுசெய்ய இவற்றால் ஒருபோதும் முடியவே முடியாது. ★

---

### அறிஞரின்

# மணி மொழிகள்

### D. E. மாசிலாமணி

1. அன்பற்றவர்களைக் குணப்படுத்துவதற்கு அன்புள்ளவர்கள் அதிகமான அன்பைச் செலவு செய்யவேண்டியிருக்கிறது.

2. நீதிக்குத் தோல்வி வெகு தூரத்திலிருக்கும்; அநீதிக்கோ வெற்றி வெகு தூரத்துக்கப்பாலிருக்கும். —தாகூர்.

3. ஒவ்வொரு புனிதமான ஆசையும் கடவுள் பிரார்த்தனையாகும். —ஹுக்கர்.

4. நான் சுவர்க்கத்தில் இருக்கவேண்டுமானால் முதலில் சுவர்க்கம் என்னிடம் காணப்படவேண்டும். —ஸ்டான்போர்டு.

5. நாம் அறியாமலே நமது எண்ணங்கள் சில, கடவுள் பிரார்த்தனையாயிருப்பதுண்டு. —விக்டர்ஹுகோ.

6. ஒரு மங்கையின் மனதைக் கவர்கிறவன் காதலன்; பலரின் மனதைக் கவர்ந்து சமூகத்தின் போக்கை நல்வழியில் மாற்றுகிறவன் தொண்டன். இவனே பாராட்டுக்குரியவன். —எட்கார்.

# உங்கள் குழந்தைகளின் பள்ளிக்கூடம்

பி. பிரான்ஸ், ஆர். என்.

ஜூன் மாதம் பிறந்ததுமே, உங்கள் குழந்தைகள் பள்ளிக் கூடம் போவதற்கு வழி பிறந்து விடுகிறது. போன மாதத்தில் எழுதிய கட்டுரையில் நீங்கள் எவ்வாறு அவர்களைப் பள்ளி வாழ்வுக்கு ஆயத்தம் செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டு எழுதியிருந்தேன். இப்பொழுது அவர்கள் படிக்கும் பள்ளிக் கூடத்துடன் உங்கள் தொடர்பு எத்தகையதாக இருக்க வேண்டும். அங்குள்ளவர்களுடன் நீங்கள் எவ்வாறு ஒத்துழைப்பதனுல் உங்கள் பிள்ளைகளின் பள்ளி வாழ்வை வெற்றியுள்ளதாக்கலாமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

நீங்கள் அவர்களை அனுப்புவதற்கு விரும்புகிற பள்ளிக் கூடத்தின் ஆசிரியர்களை எப்படியாவது காக்காய் பிடித்தாவது சிநேகம் செய்து கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள். பிள்ளைகள் அங்கே போவதற்கு முன்பே இத்தகைய உறவை அவர்களுடன் நீங்களாகவே வலிய ஏற்படுத்திக் கொண்டால் அதனுல் உங்களுக்கு நன்மையே. எப்படியும் பிள்ளைகள் அங்கு சென்ற பிறகு அவர்களுடைய உதவி உங்களுக்குத் தேவைப் படத்தான் போகிறது. அதைச் சற்று முன்னதாகவே தேடிக் கொண்டால் தான் என்ன? உங்கள் குழந்தைகளைப் பற்றிய உண்மையான காரியங்களை அவர்கள் உங்களிடம் தாராளமாக மனம் விட்டுப் பேசும்படி செய்வதற்கு இதுவே வழி. பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களின் ஒழுக்க நிலையும் உயர்வும் எத்தகையது. உங்கள் பிள்ளைகள் அவர்களைப் பின்பற்றத்தகும் முறையில் பள்ளிக் கூடத்தின் நல்ல செல்வாக்கு அவர்களுடைய உள்ளத்தைப் பண்படுத்துவது கூடுமாவென்று அறிவதும் இதனுலே கூடும். ஆகவே பள்ளிக்கூடம் திறப்பதற்குச் சற்று முன்பே, அந்தப் பள்ளிக்கூடத்தைக் குறித்து நன்முகத் தெரிந்து கொள்ளுங்கள்.

இத்துடன் நின்று விடாதீர்கள். பள்ளிக்கூடத்திற்கு வரும் குழந்தைகளிடம் என்னென்ன எதிர்பார்க்கப்படுகிறது என்றெல்லாம் அவர்களுடைய ஆசிரியர்களின் வாயிலாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். குழந்தை பள்ளிக்கூடம் போன பிறகு உங்களிடம் எதையாவது குறிப்பிட்டுப் பேசி இருந்து, குழந்தை எதைத்தான் குறிப்பிடுகிறுனென்று உங்களுக்குத் திட்டமாகத் தெரிந்திராவிட்டால், ஆசிரியர்களிடம் கேட்டுத்

தெரிந்து கொள்வதற்கு முற்படுங்கள். சில தாய்மார் சாதாரணமான நிலையில் உள்ள அப்பாவி ஆசிரியர்கள் தானே என்று நினைத்து, ஆசிரியர்களிடம் அலட்சிய பாவனையுடன் நடந்து கொள்ளுகிறார்கள். ஆகவே ஆசிரியர்களும் பெற்றோரிடம் அவ்வாறு அலட்சியமாக நடந்து கொள்ளுவது கூடியதே.

உங்கள் குழந்தையிடம் உள்ள குறைபாடுகளை நீங்கள் கவனித்து, அவனைத் திருத்த முற்படுகிறீர்கள் என்று ஆசிரியர்களுக்குத் தெரிய வேண்டும். மற்றப்படி எங்கே குழந்தையைப் பற்றிக் குறை சொல்லுகிறார்கள் என்று நினைத்துவிடப் போகிறீர்களோவென்று பயந்து, கப்சிப்பென்று வாயை மூடிக்கொண்டு மௌனியாகி விடுவார்கள். பிறகு உங்கள் பாடு கஷ்டம் தான். உங்கள் வீட்டுக் குழந்தைகள் கந்தர்வலோகத்திலிருந்து நேராகப் பள்ளிக்கூடம், வருகின்றன என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருப்பதாக அவர்களுக்குப் பட்டுவிடக் கூடாது. அப்புறம் வந்து விட்டது ஆபத்து! ஆகவே ஆசிரியர்களிடம் உங்கள் பிள்ளைகளில் அவர்கள் காணும் குறைபாடுகளைப் போக்குவதற்கு உங்களால் இயன்ற யாவும் நீங்கள் செய்வதாகக் கூறி, அவர்களுடைய நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறுங்கள். இது முக்கியம்.

வருஷம் நெடுகிலும் தாயும் ஆசிரியருமாகச் சேர்ந்து குழந்தையின் மனோ தேக சக்திகளின் அபிவிருத்திக்காக ஒத்துழைப்பது எவ்வளவு நல்லது! இத்தகைய ஒத்துழைப்பு எவ்வளவு பிரயோஜனமானது என்று குழந்தைகள் பள்ளி வாழ்வில் பிரவேசித்த பிறகே அநேகர் அறிந்து கொள்ளுகிறார்கள். ஆனால் ஆசிரியர்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ளுவதில்லை. ஆகவே ஆசிரியர்கள் பெற்றோருடன் சேர்ந்து குழந்தையின் பள்ளி வாழ்வை நலம் செய்வதற்கு வழியில்லாது போய்விடுகின்றது. பெற்றோரே தங்களின் விறைப்புத் தன்மையால் வழியை அடைத்து விடுகிறார்கள். இது தவறு.

பள்ளிக்கூடம் போவதற்கு முன்பு குழந்தை அன்றாடம் என்னென்ன செய்திருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியதில்லையா? தங்கள் உணர்ச்சிகளைக் குழந்தைகள் வெளிப்படுத்தும் வகை பற்றியும், குறிப்பாக உங்கள் குழந்தைகளின் மனோ வெழுச்சி எவ்வாறு கட்டிக் காக்கப்படவேண்டும் என்றும் ஆசிரியர் உங்களுக்கு ஆலோசனை கூறுவது நன்மையே அல்லவா? பல சமயங்களில் நமது குழந்தைகளின் குறைபாடுகளுக்கு நாம் நமது கண்களை மூடிக்கொண்டு, அவர்களைத் திருத்தாமலும் கண்டிக்காமலும் விட்டு விடுவது உண்டு அல்லவா? நாம் செய்யத் தவறுவதைச் செய்வதற்குக் குழந்தையின் உண்மையான நண்பனாக

ஓர் ஆசிரியர் இருந்தால், அது குழந்தைகளின் அதிர்ஷ்டம் தானே? அத்தகைய ஆசிரியரை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது, அவருடன் ஒத்துழைப்பதற்கு நீங்கள் முற்பட வேண்டியது உங்கள் கடமை.

வீட்டில் குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் வகையிலும் ஆசிரியர் தன்னிடம் ஒரு விதமாகவும், அன்னை இன்னொரு விதமாகவும் நடந்து கொண்டு வருவதாக குழந்தை நினைப்பது சகஜமே. நல்ல அறிவுடைய பெற்றோர் இவ்வாறு குழந்தை எண்ணுவதற்கு இடமளிக்க மாட்டார்கள். குழந்தையின் பள்ளி வாழ்விலும் மனை நிலையிலும் அபிவிருத்தி ஏற்படுவதற்கு பெற்றோரும் ஆசிரியரும் ஒத்துழைத்து, அவர்களுக்கு வழி காட்டுவது இன்றியமையாதது.

எப்போதாவது குழந்தை பள்ளி வாழ்வை அப்படியே ஏற்றுக் கொண்டு ஆசிரியர் கூறுகிற படி செய்வதற்கு சிரமப்படுகிறான். அன்றி மனமற்றிருக்கிறான் என்று உங்களுக்குப் பட்டால், அந்தப் பிரச்னையை உடனே ஆசிரியர் முன்பாக வையுங்கள். ஆசிரியர்கள் கூறுவதைத் தான் செய்வதில் சிறிது கஷ்டமிருப்பதாக குழந்தை எண்ணினாலும் கூட, உங்கள் காதில் அதைப் போட்டுக்கொள்ளாமலே, ஆசிரியர்கள் கூறுகிறபடி செய்வதே அவர்கள் கடமை என்று கூறி வாருங்கள்.

சில பள்ளிக்கூடங்களிலே நர்ஸ்மார் இருக்கிறார்கள். ஆசிரியர்களுடன் வைப்பது போன்ற உறவை அவர்களுடனும் வைத்துக்கொள்ள நீங்கள் முற்படுவதுடன், அவ்வப்போது அவர்களிடமும் ஆலோசனை கேட்டு உங்கள் குழந்தையைப் பயிற்றுவியுங்கள். உங்கள் குழந்தை சிறிது குறும்புத்தனம் செய்வதாகவும், வகுப்பில் கவனக் குறைவாக இருந்து வருவதாகவும் கேள்விப்பட்டால், அவனுடைய கண் பார்வையும் செவி யுணர்வும் சரியாக இருக்கிறதா என்று கவனித்து அறியுங்கள். சாதாரணமான அறிவுடைய எந்தச் சிறுவனும் சிறுமியும் ஆசிரியர்கள் நன்றாக, வேடிக்கையாகப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் கவனத்தை இழுக்கும் வகையில் கற்றுக் கொடுக்கும் பாடத்தில் மனதைச் செலுத்தாமல் வேறு கவனமாக இருக்க மாட்டார்கள். எந்தக் குழந்தையுமே வகுப்பில் கவனக் குறைவாக இருப்பதற்கு உடல் நலக் குறைவு ஒரு காரணமாக இருக்கலாம். மற்றப்படி பொதுவாக எந்தக் குழந்தையும் வகுப்பில் கவனமாக இருக்கவே விரும்புகிறது.

பள்ளிக்கூட வாழ்வில் முதல் நாள் மிகவும் முக்கியமானது. அவர்களை உற்சாகப்படுத்திக் கூடுமான வரை பிள்ளை பள்ளிக்கூடம் போவதற்காக வீட்டில் அழாதபடி கவனித்து, பள்ளிக்கு அவர்களை அழைத்துச் செல்

னுங்கள். பள்ளி ஆரம்பமாகின்ற முதல் நாளாக அது இல்லாதிருக்கலாம். ஆனாலும் குழந்தையின் பள்ளி வாழ்வு அன்று தானே ஆரம்பமாகிறது! அவர்களுடைய கண்கள், காதுகள், நரம்புகள், உணர்வு யாவும் புத்துயிர் பெறும் காலையாக அந்நாள் விளங்கும். புதியதான அந்த அனுபவம் குழந்தைக்கு முற்றிலும் பிரமிப்பையோ, அன்றி ஓரளவு பயத்தையோ, ஆர்வத்தையோ அவனிடம் உண்டு பண்ணுவது இயற்கை தான். அவர்கள் செய்யும் தவறுகளைப் பொருட்படுத்தாதீர்கள். பள்ளி வாழ்விற்கு முற்றுமாக அவர்கள் இசைந்து வாழ்வதற்கு இன்னமும் சில நாள் பிடிக்கும். இந்தப் பரந்த உலகத்தில் அவர்கள் இன்னமும் சின்னஞ்சிறு குழந்தைகளே என்று நினைவில் வையுங்கள்.

அவர்களிடத்தில் இயற்கையாகவே கூச்சம் இருக்குமானால், அவர்களை நீங்கள் கடிந்து கொள்வதில் பயன் இராது. ஆனாலும் இக்காரணத்தினால் உங்கள் காலைச் சுற்றிக்கொண்டு, அங்கேயே விழுந்து கிடப்பதற்கு அவர்களை அனுமதித்து விடாதீர்கள். அனைவருடனும் பழகிக் கூச்சமற்று இருப்பதற்கு அவர்களைப் பயிற்றுவியுங்கள். சகல மாணவர்களிடையேயும் அவ்வாறு கூச்சமற்று இருப்பதற்கு அவர்கள் பழகுவது அவசியமே. அப்படி கூச்சத்தை விட்டொழிப்பதற்கு நீண்ட நாள் பிடிக்கும். இதை நினைவில் வைத்துக்கொள்ளாமல், கழுத்தைப் பிடித்துத் தள்ளி, அல்லது பிரம்பாலடித்து, கரகரவென்று கையைப் பிடித்து இழுத்து வகுப்பு அறையின் வாசற் கதவு வரை அழைத்துக் கொண்டு போய், அங்கே அவர்களை விட்டு விட்டு வந்து விடுவது மிருகத்தனமாகும். அவ்வாறு செய்வது குழந்தையின் மனதை விருத்திக்கும் ஊறு விளைவிப்பதாகும். அவன் பின்னும் அதிகமாக கூச்சப்பட்டுக்கொண்டு, பிறருடன் நன்றாகப் பழகாமல் இருப்பதற்கே அடி கோலுவதாகும்.

ஆசிரியருடன் சிநேகம் பிடித்துக்கொண்டு விட்டதால், உங்களை சிறிது நேரம் வகுப்பறையில் இருப்பதற்கு அவரே அனுமதிக்கலாம். அப்படிச் செய்தால், நீங்கள் தங்கும் நேரமளவும் சிறுவனிடம் எதற்காகவும் கோபித்துக் கொள்ளாதிருங்கள்.

அவனுடைய மனவெழுச்சியைப் பக்குவப்படுத்துவதற்கு இவ்வளவு நாளும் நீங்கள் முயன்று வந்திருக்கலாம். ஆனாலும் புதிய சூழ்நிலையில் புதிய முகங்களின் மத்தியில் அவனுக்கு யாவும் மறந்து விடுவது இயற்கைதான். அப்படி அவன் பதற்றத்துடன் தன்னை மறந்து கொள்ளுகிறான் என்பதினால், நீங்கள் எடுத்த முயற்சிகள் யாவும் பாழாய்ப் போய்விட்டன என்று நினைத்து ஏமாற்றமடைந்து அவனிடம் கடுமையாக நடந்துகொள்ளாதீர்கள். மேலும் பல நாட்கள் சென்ற பிறகே

(அடுத்த பக்கம் பார்க்க)

# உழுதவன் கணக்குப் பார்த்தால்...!

"உழுதவன் கணக்குப்பார்த்தால் உழக்குதானும் மிஞ்சாது" என்பது பழமொழி. இது பழமொழிதான் என்றாலும் நம் நாட்டைப் பொறுத்த வரையில் இந்தக் காலத்திலும் இது பொருந்தும். உழுது, பண்படுத்தி, உரமிட்டுப், பயிரிட்டுக், களையெடுத்துக், காவல்காத்து விளைந்த கதிரைக் கண்டு களிப்படைகிறான் உழவன். இந்தக் களிப்பு, அறுவடை வரைதான் நீடிக்கிறது. அறுவடை முடிந்ததும் உழுதலுத்த குடியானவனுக்கு, உரம், உழவடை—அறுவடைச் செலவுகள்போக எஞ்சியிருப்பது அவன் கஞ்சிக்குக்கூடக் காணாது. பிறகு கடன் வாங்குகிறான் கஞ்சிக்காக. வாங்கின கடனுக்கு வட்டியுடன் சேர்த்து அடுத்த அறுவடையில் அளந்து கொடுத்துவிட்டு, அண்ணாந்து பார்த்துக் காலம் கழிக்க வேண்டிய நிலையில் இருக்கிறான். இந்த நிலை இன்று நேற்று அல்ல, தொன்றுதொட்டு இந்நாட்டில் இருந்துவருகிறது. வெள்ளையன் ஆட்சிபுரிந்த அந்தக்காலத்திலும் சரி குடியாட்சி நடக்கும் இந்தக் காலத்திலும்சரி இந்தத் துயரத் தொடர்கதை இந்நாட்டு உழவனைத் தொடர்ந்துகொண்டே வருகிறது.

மற்ற தொழில்களைப் போலன்றி உழவுத்தொழில் ஒரு வரம்பிற்கு உட்பட்டு இயங்கி, ஒரு குறிப்பிட்ட பலனைக் கொடுப்பதில்லை. உழவுத் தொழிலைத் தலையாய தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்குத் துணைத்தொழில் எதுவும் நம் நாட்டில் இல்லை, வேறு வரு வாய்க்கும் வழியில்லை. ஏனைய நாடுகளில் உழவுத்தொழிலைப் பின்பற்றுபவர்க்கு இல்லாத தொல்லையும், வறுமையும் நம் நாட்டில் அதே தொழிலைப் பின்பற்றுபவர்க்கு ஏராளமாக இருக்கின்றன. இவற்றில் முதன்மையாக இருப்பது உழவன் கடன் தொல்லையே. ஏனைய நாடுகளி

(முன் பக்கத் தொடர்ச்சி)

பள்ளி வாழ்வுக்கு அவன் முழுவதுமாகத் தகுதியாயிருப்பான். உடனடியாக எவ்வகையிலும் அவன் பள்ளிக்கூடத்தில் குறைவற, நன்றாக நடந்து கொள்ள வேண்டுமெனப் பெற்றோர் கனவு காண்பது பல தருணங்களில் வெறும் பகற் கனவாகவே முடியும்.

எப்படியும் வைத்தியர் துணை, ஆசிரியர் துணை, உங்கள் சொந்த முயற்சி இவற்றின் துணையுடன் குழந்தைகளைப் பள்ளி வாழ்வில் வெற்றியும், பிற்காலத்தில் க்ஷேமமும் பெறும் வகையில் பயிற்றுவிப்பது உங்களால் கூடியதே. ★

—'நல்வழி',

றும் உழவர்க்குக் கடன் இருக்கிறது. ஆனல், மற்ற நாடுகளுக்கும் நம்நாட்டிற்கும் உள்ள வேறுபாடு எதைப்பொறுத்து என்றல் கடன் ஏற்பட்ட காரணத்தைப் பொறுத்துதான். மற்ற நாடுகளில் உழவர்கள் கடன் வாங்கி, புதுப்புதுக் கருவிகள் கண்டு, விஞ்ஞானத் துணையுடன், நிலவளத்தைப் பெருக்கி வளமாக வாழ்கின்றனர். நம்நாட்டு உழவர்கள் கடன் வாங்கி தங்கள் வறுமையைப் போக்கி, வளத்தைப் பெருக்கி, வாட்டத்தைத் தவிர்க்கும் வழிகளில் பயன்படுத்தாமல், பயனற்ற வழியில் செலவழித்து வருகிறர்கள்—வந்தார்கள்.

உழவர் கடன் பற்றிய ஆய்வுக் குழுக்கள் பல நியமிக்கப்பட்டன, மத்திய, மாநில ஆட்சியாளர்களால். அவற்றுள் முக்கியமானவை 1875–ல் நிறுவப்பட்ட தக்கண உழவர்குழு, 1880–ல் நிறுவப்பட்ட பஞ்ச விசாரணைக் குழு, 1892–ஆம் ஆண்டு பிரடரிக் நிக்கல்சன் அறிக்கை (Sir Frederick Nicholson's Report) சென்னை மாகாண வங்கி விசாரணைக்குழு, 1935–ம் ஆண்டு உழவர் கடன் அறிக்கை, 1946–ஆம் ஆண்டு உழவர் கடன் பற்றிய பொருளாதார வல்லுநர் அறிக்கை முதலியன. அவ்வெல்லாம் இந்நாட்டின் உழவர் நிலையைப்பற்றித் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

## உழவுத்தொழில் உருக்குலைவதற்கான காரணங்கள்

(1) தலைமுறைக் கடன்: ஒவ்வொரு உழவனுக்கும் தன் பாட்டன், தகப்பன் முதலிய முன்னோர்கள் பல வழிகளிலும் செலவிட்டுக் கடன்பட்டு வைத்த பெரும் சுமைதான் இந்தத் தலைமுறைக்கடன். வட்டியும் முதலுமாகச் சராசரி ஒவ்வொரு உழவனுக்கும், குறிப்பாக சென்னை மாநிலத்தில் மட்டும் 1945–ல் சுமார் ரூ. 113 ஆகும்.

| | | |
|---|---|---|
| 1945–ல் சாதாரண உழவன் ஒருவனின் குடும்பக் கடன் | ரூ. | 3757·1 |
| குடும்பத்தின் ஆண்டுச் செலவு | ரூ. | 2947·9 |
| 1945–ல் சாதாரண உழவனின் குடும்பத்தின் மொத்த தேவை | ரூ. | 6705·0 |
| 1945-ல் வருமானம் | ரூ. | 4066·0 |
| சாதாரணமாக வரவுக்கு மேல் தேவைப்படும் செலவு | ரூ. | 2,639·0 |

இது தவிர எதிர்பார்த்த வகையில் ஏற்படும் தொல்லைகளும், ஆடம்பரச் செலவுகளும் உழவனை மேலும் புதிய கடன்காரனாக ஆக்கிவிடுகின்றன

(2) பருவமழை இன்மை நம்நாட்டு உழவுத்தொழில் பெரும்பாலும் பருவமழையையே நம்பி இருக்கிறது. பருவ

மழையையே நம்பி ஆடப்படும் இந்தச் சூதாட்டத்தில் இலாபத்தைக் காட்டிலும் இழப்புதான் அதிகம். பருவமழை பெய்யத் தவறிவிட்டால் பஞ்சம் தலை விரித்தாட ஆரம்பித்துவிடுகிறது. பருவமழை அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் அழிவும் அதிகம். இந்தப் பருவமழை பெய்யத் தவறினாலும், அதிகரித்து விட்டாலும் ஆபத்து. நாட்டில் இது வரை பருவமழையின்மையைக் காட்டிலும் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட அழிவு அதிகம். பருவமழையின்மை, வெள்ளம் இவற்றால் ஏற்படும் நலிவையும் இழப்பையும் ஈடுகட்ட வேறு வருவாய் இல்லாத காரணத்தால் உழவன் கடன் வாங்குகிறான். ஏற்கனவே உள்ள கடனுடன் இந்தக் கடனும் வட்டியும் சேர்ந்து உழவனின் கடன் பளுவை அதிகமாக்குகிறது.

(3) அதிக விளைச்சலின்மை: உழவுத்தொழிலைப் பின்பற்றும் உலக நாடுகளில் பெரியது நம் நாடு. ஐ. நா. வின் பொருளாதாரக் குழுவினரால் 1951-ல் வெளியிடப்பட்ட "நிலச்சீர் திருத்தம்" என்ற ஏட்டில் கண்டபடி உலகில் உழவுத்தொழிலை நம்பி வாழும் மக்கள் தொகை 128·5 கோடியாகும். இதில் 87·8 கோடி மக்கள் ஆசியாவில் வாழ்கிறார்கள். ஐரோப்பாவில் மூவருக்கு ஒருவரும், வட அமெரிக்காவில் ஐவருக்கு ஒருவரும், ஆசியா ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் நால்வருக்கு மூவரும் நிலத்தையே நம்பி வாழ்கிறார்கள். நிலத்தை நம்பி வாழும் மக்கள் அதிகம் இருக்கும் நாட்டில், ஒரு ஏக்கரின் சராசரி வரும்படி குறைவாகவே இருக்கிறது. ஐ. நா. உணவு விவசாய மாதாந்தர வெளியீட்டில் கண்டபடி வட அமெரிக்காவில் தலைக்கு $2\frac{1}{2}$ டன்னும், ஆசியாவில் $\frac{1}{4}$ டன்னுக்கும் குறைவாகவும், ஆப்பிரிக்காவில் 1/8 டன் ஆகவும் விளைச்சல் இருக்கிறது. உலக உற்பத்தியில் 95% நெல் ஆசியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. நெல் உற்பத்தியில் நம் நாடு உலகில் இரண்டாவதாக இருக்கிறது. இருந்தும் ஏக்கர் ஒன்றுக்கு இங்கு உற்பத்தியாகும் நெல் மற்ற நாடுகளைக் காட்டிலும் குறைவே. இத்தாலி மிகச் சிறிய நாடாக இருந்தபோதிலும் உலகில் நெல் உற்பத்தியில் மற்ற எல்லா நாடுகளைக் காட்டிலும் ஏக்கருக்கு அதிகமான உற்பத்தியைக் கொண்டிருக்கிறது. இதே போன்று மற்ற பொருள்களின் உற்பத்தியும் ஏனைய நாடுகளைக் காட்டிலும் நம் நாட்டில் குறைவாகவே இருக்கின்றது.

(4) சிறு நிலப்பிரிவுகள்: 1948-ம் ஆண்டு நம் நாட்டில் மக்கள் தொகை 33·7 கோடி. விவசாயத்திற்குப் பயன்பட்ட நிலப்பரப்பு 35·8 கோடி ஏக்கர். ஆள் ஒன்றுக்கு விவசாயத்திற்குப் பயன்படும் நிலத்தின் பரப்பு 1·06 ஏக்கர். விவசாயத்திற்கு ஏற்ற சிறிய பண்ணை எத்தனை ஏக்கர்

கொண்டது என்று இன்னும் திட்டவட்டமாக முடிவுசெய்யப் படவில்லை. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் 75 ஏக்கர் கொண்டது ஒரு சிறிய பண்ணையாகக் கருதப்படுகிறது. கிழக்கு ஐரோப்பாவில் 12½ ஏக்கர் ஒரு சிறிய பண்ணையாகக் கருதப்படுகிறது. ஆனால் ஆசிய நாடுகளில் 2½ ஏக்கர் கூட பண்ணைக்குப் பெரிய இடமாகக் கருதப்படுகிறது. நிலத்தின் அளவு குறைவாக இருப்பதுடன் வெவ்வேறு இடங்களில் சிதறுண்டும் இருக்கின்றன. உதாரணமாக 10 ஏக்கர் கொண்ட ஒரு பண்ணை சிறு சிறு பிரிவாகப் பிரிந்து 30 இடங்களில் இருக்கும். இதனால் காலமும் சக்தியும், நேரமும் உழைப்பும் பாழ்படுத்தப்படுகின்றன. சிறு துண்டு நிலத்தை நம்பி உழவன் தன் வாழ்க்கையை அதன்பேரிலேயே அமைத்துக் கொள்கிறான். அவனால் அதனைப் பண்படுத்தவும் முடிவதில்லை; அதிலிருந்துபோதுமானபலனைப் பெறவும் முடிவதில்லை.

(5) **கால்நடைகள் :** உலகில் உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 69 கோடி. நம் நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை 13·7 கோடி. உலகில் மற்ற எந்த நாட்டைக் காட்டிலும் இந்தியாவில்தான் கால்நடைகள் அதிகம். நம் நாடுதான் உலகில் மொத்தப் பால் உற்பத்தியில் இரண்டாவது ஆகும். ஆனால் கால் நடையின் தனிப்பட்ட உற்பத்தி உலகிலேயே நம் நாட்டில்தான் மிகக்குறைவு. பிராணி ஒன்றுக்கு 8 அவுன்ஸ் பால் கிடைக்கிறது. இந்நாட்டு உழவனின் வருமானத்தைப் பெருக்கக் கால்நடைகள் பயன்படுவதில்லை.

(6) **துணைத்தொழிலின்மை :** வேலையின்மை : நம் நாடு ஒரு விவசாய நாடு. ஏறத்தாழ 80% மக்கள் உழவுத் தொழிலையே நம்பி வாழ்கிறார்கள். 1951-ம் ஆண்டுக் கணக்குப்படி 28·5 கோடி மக்கள் 24·5 கோடி ஏக்கர் நிலத்தை நம்பிப் பிழைக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ஆறு மாதங்கள் வேலையின்றி ஓய்வாக இருக்கும் உழவனுக்குத் துணைத் தொழிலோ அல்லது வேறு தொழிலோ இல்லாத காரணத்தால் சோம்பேறியாக வாழ வேண்டியிருக்கிறது. வாழ்க்கைத் தரமும் இப்பொழுது உயர்ந்து விட்டது. வயலில் வரும் வருமானம் வாழ்க்கை நடத்தப் போதாமல் கடன் வாங்குகிறார்கள். இத்துடன் ஒரு ஆள் செய்யும் வேலைக்கு நாலைந்து ஆட்கள் இருப்பதால் வேலை செய்வோர் பொறுப்பினைத் தட்டிக் கழிப்பவர்களாகவே காட்சியளிக்கிறார்கள்.

(7) **பயனற்ற செலவுகள் :** நம் நாட்டில் உழவர்கள் வாங்கும் கடன் பெரும்பாலும் நிலத்தைப் பண்படுத்துவதிலோ அல்லது வேறு பல விஞ்ஞான முறைகளைக் கையாள்வதிலோ செலவழிக்கப்படுவதில்லை. இங்கு

வாங்கப்படும் கடன், வழக்கு மன்றங்களிலும், திருமணம், பண்டிகை முதலிய வழிகளிலும் விரயம் செய்யப்படுகிறது. உழவர் கடன்பற்றி அமைக்கப்பட்ட எல்லா ஆய்வுக்குழுவினரும் ஏனையோரும் ஒவ்வொரு அறிக்கையிலும் இதுபோன்ற பயனற்ற வழிகளில் பணம் பாழ் செய்யப்படுவதை எடுத்துக் காட்டி இருக்கின்றனர். நிலச் சீர்திருத்தம்பற்றி ஐ.நா. 1951-ல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த பயனற்ற செலவுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உழவர் கடன் பற்றிய W. R. S. சத்திய நாதன் அறிக்கையில் சென்னை மாகாணத்தில் 141 கிராமங்களில் எடுத்துள்ள கணக்கின்படி உழவன் செலவுப் பட்டியலின் விவரம் கீழ்க்காண்க.

| செலவின் வகை | தொகை மொத்தச் செலவில் |
|---|---|
| பூர்வீகக் கடன் அடைக்க | 25·1 % |
| உழவடைச் செலவு | 10·0 ,, |
| நிலவளம் பெருக்க | 4·4 ,, |
| வியாபாரம் | 12·9 ,, |
| நிலவரி | 3·3 ,, |
| நிலம் வாங்குதல் | 13·8 ,, |
| குடும்பச் செலவு | 6·1 ,, |
| பண்டிகை, திருமணம் | 10·5 ,, |
| குழந்தைக் கல்வி | 1·4 ,, |
| வீடுகட்டல் | 5·6 ,, |
| இதரச் செலவுகள் | 6·9 ,, |

மேற்கண்ட காரணங்களுடன் கொடுக்கல் வாங்கல் நடத்துபவர்களும், ஆட்சியாளர்களின் நிலப் பாதுகாப்புக் கொள்கையும் சேர்ந்து உழவர்களை மேன்மேலும் கடன் வாங்கும்படித் தூண்டி அவன் அழிவுக்குக் குழி தோண்டுவதாக அமைகிறது. தலைமுறைக்கடனை ஒழிப்பதற்குத் தேவையான உழவர் கடன் நிவாரணச் சட்டம் போன்றவைகள் அவ்வப்போது இயற்றப்பட்டு வருகின்றன. எனினும் இதனால் சிலபல தொல்லைகள் வளர்ந்து வருகின்றனவேயன்றிக் கடன் ஒழிந்து நிம்மதியாக இருக்க வழி ஏற்படுவதில்லை.

## செய்யப்படவேண்டியவைகள்

பருவமழையின்மையினால் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்க விஞ்ஞானத்தின் துணை கொண்டு செயற்கைமழை பெய்விக்க முயற்சிகள் செய்யப்படவேண்டும். பருவ மழைக்குக் காரணமான காடுகளை அழிக்காமல் பாதுகாத்து வரவேண்டும். வெள்ளத்தினால் ஏற்படும் அழிவைத் தடுப்பதற்கும்—தடுத்து அவற்றை விவசாய நலனுக்குப் பயன்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். ஏனைய நாடுகளைக்காட்டிலும் இயற்கை வளமும் மக்கள் தொகையும் அதிகமாயிருக்கும் நம் நாட்டில் விளைச்சல் மாத்திரம் மற்ற நாட்டைக் காட்டிலும் மிகமிகக் குறைவாக இருக்கிறது. இதற்கு முக்கிய காரணங்கள்: வயல் வளமிழந்து போதல், விவசாயத்தில் மிகவும் பிற்போக்கான பழைய

முறையைக் கையாளுதல், கிராமத்தை நம்பி வாழும் அதிக மக்கள் தொகை, சமுதாயத்தின் அமைப்பு இவைகளும் இன்ன பிறவுமாகும். ஒரே வயலில் தொடர்ந்து பயிரிட்டுவந்தால் நாளடைவில் அதன் வளம் வற்றி விளைச்சல் குறைகிறது. வயலுக்கு நல்ல உரமிட்டும், மாற்றுப் பயிர் முறையைக் கையாளுவதின் மூலமும் வயல் இழந்த சத்தை ஈடுசெய்யலாம். நிலங்களைத்துண்டாடுவது பழக்கத்திலிருக்கும் பாகப்பிரிவினையினால் ஏற்படும் கேடு. ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் கீழுள்ள நிலத்தைத் துண்டாடக்கூடாது—என வரையறுத்தல் வேண்டும். கூட்டுறவு விவசாயத்தின் மூலமும் நிலத்தைச் சிறு துண்டுகளாக ஆக்காமல் காத்து வளத்தைப் பெருக்கலாம். அரசாங்கமே அந்தமாதிரி நிலங்களை எடுத்துக்கொண்டு உழவர்களுக்குக் குறுகியகாலக் கடன்—நீண்டகாலக் கடன் ஆகிய வசதிகள் மூலம் பங்கிட்டுக்கொடுக்கலாம் "தக்காவி" கடனுக்குப் பதிலாக உழவர்களுக்குத் தேவையான பொருள்களை வழங்கி உரம், விதை முதலியவைகள் பெறுவதில் உள்ள காலதாமதமும் தவிர்க்கப்பட வேண்டும். இவற்றுடன் உழவர்களுக்குத் துணைத்தொழில் மூலம் வருமானத்திற்கு வழி செய்ய வேண்டும். கிராமத்தை வெறுத்து நகரவாழ்வை விரும்பி நகரில் பெருகும் மக்களைக் கிராமத்தில் இருத்தி, உழவுத் தொழிலைக் கைக்கொள்ளச் செய்து நகரத்திலுள்ள மின்சாரவசதி, பொழுதுபோக்கு வசதி, உல்லாச ஓய்வுநேர விடுதிகள் பலவும் கிராமங்களில் கிடைக்கும்படிச் செய்தல் அவசியம். கால்நடையின் எண்ணிக்கை மற்ற நாட்டைக்காட்டிலும் அதிகமாக இருக்கிறதேயொழிய அதன் பயன் மற்ற நாட்டைக்காட்டிலும் மிகமிகக் குறைவு. கால்நடை உணவான சத்துள்ள புல் பயிரிடப்படுவது பெருகவேண்டும். கால்நடைகளுக்கு ஏற்படும் நோயைத் தவிர்த்து நல்ல முறையில் பாதுகாத்து வரவேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நம்நாட்டு உழவனின் எண்ணத்தில் எழுச்சி வேண்டும். பயனற்ற செலவுகளான பண்டிகைச் செலவுகளையும், கடன் வாங்கியும் கலியாணம் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்பன போன்ற போக்கையும், "என் சொத்து முழுவதும் போனாலும் சரி அவனை ஒருகை பார்த்துவிடுகிறேன்" என்று மன்றமேறும் போக்கையும்; "என் பூர்வீகச் சொத்து இதில் ஒரு துண்டு நில மிருந்தாலும் நால்வருக்கும் பங்குபோட்டுத்தான் ஆகவேண்டும்" என்று கூறிச் சிறு பகுதியையும் பல துண்டுகளாக்கும் பழமைப் போக்கையும், மழைக்காக வருணனுக்குக் காப்புக் கட்டிப் பொருளைப் பாழாக்கும் மடமைப் போக்கையும் மாற்றி, விஞ்ஞானத்தின் துணைகொண்டு, கூட்டுறவுமுறையில் பண்ணைகளை

(56-ம் பக்கம் பார்க்க)

# டி. இ. ஓ. வின் உத்தரவு செல்லாது

## சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு

25–7–55

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஜஸ்டிஸ் பி. ராஜகோபாலன் செங்கோட்டூரில் உள்ள மாப்ளா உதவி பெறும் ஆரம்பப் பாடசாலையின் மானேஜர் கே. கொய்மார் என்பவர் அனுப்பியிருந்த மனுவை (Writ Petition) இன்று ஏற்றுக் கொண்டதோடு, மேற்படி பள்ளிக்கூடத்திற்கான அரசாங்க அனுமதியை (Government Recognition) ரத்து செய்து கோழிக்கோட்டு டி. இ. ஓ. பிறப்பித்திருந்த உத்தரவையும் செல்லாது என்று தீர்ப்பளித்து விட்டார்.

மேற்படி பள்ளிக்கூட மானேஜராகிய மனுதாரரின் வழக்கு பின் வருமாறு :

1952-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று, மனுதாரர், அவருடைய பள்ளிக்கூடத்தில் அப்போது ஆசிரியராக இருந்த கோபாலன் நாயர் என்பவருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பினார். அந்த நோட்டீசில், அந்த கோபாலன் நாயர் ஒரு கம்யூனிஸ்ட் என்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறதென்றும், எனவே அவரைத் தொடர்ந்து பள்ளிக்கூட வேலையில் வைத்திருப்பது உசிதமானதாகத் தெரியவில்லை என்றும், அன்றிலிருந்து மூன்று மாதத் தவணை அவருக்குத் தரப்படுகிறது என்றும், அதற்குப் பிறகு அவர் வேலையில் வைத்துக் கொள்ளப்படமாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நோட்டீசுக்குக் கோபாலன் நாயர் எந்தவிதப் பதிலும் அனுப்ப வில்லை. 6—1—52 அன்று, மனுதாரர், அந்த ஆசிரியருக்கு, அவர் வேலையிலிருந்து விலக்கப் படுவதற்கான காரணங்களை விளக்கி ஓர் அறிக்கை அனுப்பினார். 4—4—52 அன்று மனுதாரர், அந்த ஆசிரியரை வேலையிலிருந்து விலக்கிவிட்டார். 1920ல் நிறைவேற்றப்பட்டு, இப்போதும் அமுலில் இருக்கும் சென்னை ஆரம்பக் கல்விச் சட்டத்தின்படி (Madras Elementary Education Act of 1920), மேற்படி உத்தரவை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ளும் உரிமை மேற்படி ஆசிரியருக்கு இருந்தும் ஆசிரியர் அப்பீல் செய்யவில்லை.

13–5–52 அன்று, அந்த மாவட்டத்து டி. இ. ஓ. மேற்படி ஆசிரியரை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று

மனுதாரருக்கு உத்தரவு அனுப்பினர். இந்த உத்திரவின் படி நடக்காவிட்டால், அவருடைய பள்ளிக்கூடத்திற்குத் தரப்பட்டிருக்கிற அரசாங்க அனுமதி (Recognition) ரத்து செய்யப்படுமென்றும் அவர் மனுதாரருக்கு (மானேஜருக்கு) அறிவித்திருந்தார். மானேஜர் அந்த உத்திரவின்படி நடக்க மறுத்ததோடு, தான் செய்தது நியாயமே என்பதை விளக்கி டி. இ. ஓ. வுக்கு ஒரு கடிதமும் எழுதினர். 18-10-52 அன்று, பள்ளிக்கூட அனுமதியை ரத்து செய்து டி.இ.ஓ. ஓர் உத்தரவை மானேஜருக்கு அனுப்பினர். மானேஜர், கல்வி இலாகாவின் உத்தரவை (டி. இ. ஓ. வின் உத்தரவை) வேண்டுமென்றே மீறியிருக்கிறரென்றும், அப்படி மீற நடந்த காரணத்தால், பள்ளிக்கூட அனுமதிக்கான 28 A விதியை அவர் புறக்கணித்ததாக ஆகிறது என்றும், எனவேதான் அனுமதி ரத்து செய்யப்படுகிறது என்றும் டி. இ. ஓ. அந்த உத்தரவில் விளக்கம் அளித்திருந்தார். டி. இ. ஓ வின் இந்த உத்தரவு செல்லாது என்பதும் அந்த உத்தரவை ரத்து செய்து தன் பள்ளிக்கூடத்திற்கான அனுமதியை மீண்டும் தர வேண்டுமென்பதும், (மானேஜரின்) மனுதாரரின் வேண்டுகோள்.

மேன்மை தங்கிய நீதிபதி, தன்னுடைய தீர்ப்பு உரையில் தெரிவிப்பதாவது:—

"பள்ளிக்கூட அனுமதியை ரத்து செய்ததற்கான காரணம் என்று டி. இ. ஓ. குறிப்பிட்டிருப்பது, விலக்கப்பட்ட ஆசிரியரை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளும் படி தான் அனுப்பிய உத்தரவின் படி மானேஜர் நடக்கவில்லை என்பதுதான்."

"இப்படிப்பட்ட ஓர் உத்தரவை அனுப்பும் அதிகாரமே டி.இ.ஓ வுக்கு கல்வி இலாகா விதிகளின்படி கிடையாது என்று ஏற்பட்டுவிட்டால், இப்படிப்பட்ட ஓர் உத்தரவை மீறி நடந்து கொள்வது குற்றமாகாது. அதை ஒரு குற்றமாகக் காட்டி பள்ளிக்கூட உத்தரவை ரத்து செய்வதும் முறையாகாது. கல்வி இலாகாவின் எல்லா நியாயமான உத்தரவுகளையும் மானேஜர்கள் ஏற்று நடந்தால் தான் அவர்களுடைய பள்ளிக்கூடத்திற்கு அரசாங்க அனுமதி உண்டு—என்பதாக 28 A விதி சொல்வதாக வைத்துக் கொண்டாலும் கூட— அந்த விதி அப்படிச் சொல்கிறதா இல்லையா என்பதைப் பற்றி நான் இப்போது எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. ஏனெனில் அது இந்த வழக்கிற்கு அவசியமில்லை,— அப்படியே அந்த விதி அறிவிப்பதாக வைத்துக் கொண்டாலும் கூட டி. இ. ஓ. தனக்கு அதிகாரமில்லாத ஒரு விஷயத்தில் ஓர் உத்தரவு பிறப்பிப்பாரானல் அது கல்வி இலாகாவின் நியாயமான உத்தரவாக ஆகாது; அப்படிப்பட்ட உத்

தீர்வை மீறிய ஒரு கிர்ணத்தைக் காட்டி பள்ளிக்கூட அனுமதியை மறுப்பதும் சரியாகாது.

“சென்னை ஆரம்பக் கல்விச் சட்டத்தின் படி உருவாக்கப்பட்டிருக்கிற கல்வி இலாகா விதிகள் எவற்றிலும், வேலையிலிருந்து விலக்கப்பட்ட ஓர் ஆசிரியரை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி வற்புறுத்தும் அதிகாரம் டி. இ. ஓ. வுக்கு இருப்பதாகத் தெரிவிக்கப்படவில்லை, டி. இ. ஓ. வின் சார்பில் இந்த வழக்கில் வாதாடிய அரசாங்க வழக்கறிஞராலும், அப்படிப்பட்ட ஒரு விதி இருப்பதாக எடுத்துக்காட்ட முடியவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம் ஏதேனும் ஓர் ஆரம்பப் பள்ளியில் பணியாற்றும் ஓர் ஆசிரியரை அதன் மானேஜர் வேலையிலிருந்து விலக்கி விட்டால், அந்த உத்தரவை எதிர்த்து டி, இ. ஓ. வுக்கு அப்பீல் செய்து கொள்ளும் உரிமை, அந்த ஆசிரியருக்கு, கல்வி இலாகா விதிகளின் படி நிச்சயமாக இருக்கிறது' அது போலவே, அப்படி ஒரு அப்பீல் வருமானால், அந்த அப்பீலை அனுப்பிய ஆசிரியரை, அப்பீல் விசாரணை முடியும் வரையில் மீண்டும் தற்காலிகமாக வேலையில் வைத்திருக்கும்படி உத்தரவிடவும் டி. இ. ஓ. வுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் இந்தக் குறிப்பிட்ட வழக்கிலோ, வேலையிலிருந்து விலக்கப்பட்ட ஆசிரியர், விலக்கல் உத்தரவை எதிர்த்து கல்வி அதிகாரிக்கு அப்பீல் செய்யவில்லை.

13 (2) b விதியின் படி, ஆரம்பப் பள்ளி மானேஜருக்கு, தன் பள்ளியில் உள்ள எந்த ஆசிரியரையும் மூன்று மாத நோட்டீஸ் அல்லது மூன்று மாதங்களுக்குரிய சம்பளத்தை முன்னதாகக் கொடுத்து, அந்த விதியில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக, வேலையிலிருந்து விலக்கும் அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தின் படிதான் மனுதாரர், கோபாலன் நாயருக்கு எழுத்து மூலம் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். அந்த நோட்டீசுக்குப் பதில் தருவதற்காகப் போதுமான அவகாசம் மனுதாரரால் ஆசிரியருக்குத் தரப்பட்டிருக்கிறது. அந்த ஆசிரியரை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளும் படி டி. இ. ஓ. உத்தரவு அனுப்புவதானால், அப்படிச் செய்வதற்குக் கல்வி இலாகா விதிகளில் இடமிருக்க வேண்டும். ஆனால் விதிகளிலோ அப்படிப்பட்ட அதிகாரம் எதுவும் டி. இ. ஓ. வுக்குத் தரப்படவில்லை. எனவே மனுதாரரின் பள்ளிக்கூட அனுமதியை ரத்து செய்து டி. இ. ஓ. பிறப்பித்த உத்தரவு செல்லுபடியாகாது என்பது விளக்கமாகத் தெரிகிறது. எனவே இந்தத் தீர்ப்பின் மூலம் டி. இ. ஓ. வின் மேற்படி உத்தரவை தள்ளுபடி செய்கிறேன். மனுதாரரின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளுகிறேன். ★

—இந்தியன் எக்ஸ்பிரஸ்.

(25–7–55)

# High Court Quashes D. E. O's Order

## SCHOOL MANAGER'S PLEA ALLOWED

Justice P. Rajagopalan allowed in the Madras High Court a writ petition preferred on behalf of K. Koimar, Manager of the Moplah Aided Elementary School, Chengottur, and quashed an order of the District Educational Officer, Central Malabar, Kozhikode, withdrawing recognition accorded to the aforesaid school on the ground that the petitioner had disobeyed an order issued by him to reinstate a teacher whose services had been terminated.

The petitioner's case was that on Jan. 1, 1952, the petitioner served a notice on one Gopalan Nair, an assistant in his school, which recited that he was reported to be a Communist and that it was therefore not desirable to continue him in the service of the school. Three months, notice was given to the teacher at the end of which he was told that his services would be terminated. Gopalan Nair sent no reply to this letter. On Jan. 6, 1952, the petitioner served a memo of charges on the teacher and on April 4, 1952 the petitioner discharged the teacher from service. Though a right of appeal was provided by the Rules framed under the Madras Elementary Education Act of 1920, the teacher did not prefer any appeal.

On May 13, 1952, the D. E. O. directed the petitioner to reinstate the teacher in service, and informed him that if he defaulted compliance with the order the D. E. O. would be compelled to withdraw recognition accorded to the school. The petitioner declined to reinstate the teacher and justified the discharge. On Oct. 18 1952, the D. E. O. issued an order withdrawing recognition on the ground that the petitioner had deliberately, disobeyed the departmental orders, thereby violating Rule 28—A of the Rules governing recognition. Hence this writ petition to quash that order.

His Lordship in the course of his judgment observed: "A specific ground put forward by the D. E. O,

# வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 9 | 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 10 | 0 | 25 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிக்கு ரூ. 1—2—0 அனுப்பவும்.

## கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** | | | | | |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 28 | 19–5–'54 |
| **பாலர் கதா போதினி** | | | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 59 | 19–5–'54 |

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ 0–5–0 அனுப்பவும்.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc. L. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம வகுப்பு | 0 | 8 | 0 | 18 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

## புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 8 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்களை மாதிரி பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

Regd No. M. 5018.


## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., B.T.

| | புத்தகத்தின் விலே | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 12 | 0 | 14 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–15–0 அனுப்பவும்.

## நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A, B. T,
T. S. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 10 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–11–0 அனுப்பவும்.

## தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A., L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4, 5–வது வகுப்புகளுக்கு | 0 | 5 | 0 | 8 | 4–5–'55 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–2–0 அனுப்பவும்.

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 13 | 19–5–'54 |

V. K. சேஷாத்திரி, B. A., B. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 7 | 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 12 | 19–5–'55 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 12 | 0 | 12 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–1–0 அனுப்பவும்.

Mother India English Reader Primer - I 0–5–0

மாதிரிப் பிரதிகளுக்கு ரூ. 0–2–0 அனுப்பவும்.


Printed at the Venkatesan Press, Madras—1.